அறைவு 04 இயம் 31 March 05-11, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
LIFE SKILL
UK SPONCER
VISA
CALL:
0770203201


HELLO MOBILE WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# "உணவில் ஏன் நஞ்சை வைக்கின்றீர்கள்"




**தி**ருகோணமலையில் சம்பூரில் அமையவிருக்கின்ற அனல் மின்நிலையத்திற்கு எதிராகப் போராடிவரும் மக்கள் நடாத்திய கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது தமது வாழ்வில் நஞ்சைக் கலக்க எடுக்கப்படும் நடவடிக்கையாகவே இவ்வனல் மின்நிலையத்தை நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை-பசுமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது கடந்த 2ம் திகதி சம்பூரின் சாலையூர் பெருந்தெருவில் நடாத்தப்பட்டது.

அதே தினத்தில் சம்பூரில் அமைக்கப் படும் ஆடைத்தொழிற்சாலை - யொன்றுக்கு அடிக்கல் நாட்ட வருகை தந்திருந்த சிறீலங்காவின்

பக் 17

# கொலையில் சம்பந்தப்பட்ட ஏனைய இருவரும் யார்?



**ச**ம்பூரில் கல்லுடன் கட்டப் பட்டுக் கிணற்றில் வீசப்பட்டுக் கொலை செய்யப் பட்ட சிறுவனின் கொலை விசாரணைகளில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இக்கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் அடிப்படையில் கைதாகி விசாரணை - களுக்குள்ளாகியுள்ள சந்தேகநபரான கொல்லப்பட்டவரின் மைத்துனர் அளித்துள்ள புதிய வாக்குமூலமொன்றில் மேலும் இருவர் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளதை அடுத்தே இத் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 3ம் திகதி மூதுர் நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்க விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாக்குமூலம் அளிக்க அழைக்கப்பட்ட சந்தேகநபரான சிறுவன் இந்த கொலையுடன் ஏனைய இருவருக்கு தொடர்புள்ளதாகவும், அவர்களே குற்றத்தை ஒப்புக் கொள்ள கூறியதாகவும் நீதவானிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சம்பூர் ஏழாம் வட்டாரம் பகுதியில் வசித்த ஆறு

பக் 17

## "அத்துமீறிக் குடியேறவில்லை இது எமது பூர்வீக நிலம்"

### நீதிமன்றில் சம்பூர் மக்கள்



**ச**ம்பூர் அனல் மின் நிலையத்திற்கு நீர் விநியோகிக்கும் குழாய்க் கட்டமைப்பினால் தமது பூர்வீகக் காணிகளையும், வீடுகளையும் இழக்கும் மூன்று குடும்பங்களுக்கு எதிராக மூதூர் பிரதேசச் செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் - கொள்ளப்பட்ட போதே அம் மக்களின் சார்பில் பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி இவ்வாறு......

பக் 17

உலக வலையமைப்பில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்




உங்கள் பிரதேசத்தில் டிஸ் TV விற்பனையாளராகிக் கவர்ச்சிகரமான நிரந்தர வருமானங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்
மாவட்ட விநியோகத்தர் :
நியூ ரிங்கோ ஸ்டேசனர்ஸ் தனியார் கம்பனி
இல. 27, 3ம் குறுக்குத்தெரு, திருகோணமலை.
026 2223071 - 0777697184

# அனுமதியற்ற படகுகளும் அத்துமீறிக் கட்டப்பட்ட வாடிகளும் அகற்றப்படும்

### குச்சவெளி பிரதேசச் செயலாளர் உறுதி



**வெளி**மாவட்ட மீனவர்களின் தொல்லைகள் தொடரும் கும்புறுப்பிட்டி கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் அனுமதியற்ற படகுகளையும் அவைசார்ந்து கட்டப்படட்டிருக்கும் வாடிகளையும் அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக குச்சவெளிப் பிரதேசச் செயலாளர் திரு. தனேஸ்வரன் அவர்கள் உறுதியளித்-துள்ளார்.

கடந்த 2ம் திகதி குச்சவெளிப்

பக் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# சீனாவைவிட இந்தியாவே சிறந்தது என்றோர் சாணக்கியம்...?

தமிழ்த் தாயகத்தை மீட்பதற்கான ஆயுதப் போராட்டத்தைத் தான் தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக நடாத்தி வந்துள்ளனர். அவ்வாயுதப் போராட்டத்தின் அடிநாதமாக இருந்தது தமிழர்களின் தேசியம் என்ற சிந்தனையே!

தமிழர்களின் தேசியம் என்பது தமிழர்களின் தாயகப் பிரதேசமான தேசத்தினை அடிப்படை - யாகக் கொண்டது. தேசத்தின் மீது கொண்ட பற்றுறுதியான செயற்பாடுகளே தேசியம் என்ற செயற்பாட்டுச் சொல்லாக முன்வந்தது.

தேசம் என்பது ஒரு நிலப்பிரதேசத்தை வரையறுக்கும் பெயர்சொல்லாக இருக்க, அந் நிலப்பிரதேசத்திற்குரிமையைக் கொண்டாடுகின்ற இனம் அவ்வுரிமையை நிலைநாட்டவும், வெளிப்படுத்தவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் செயற்பாடுகளுமே தேசியம் என்ற வினைச்சொல்லினால் வெளிப்படுத்தப் பட்டன.

ஆக மொத்தத்தில் தேசமும், தேசியமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிபடமுடியாதவையாக உலகில் தேசத்திற்கு உரிமையான மக்களிடையே காணப்படுகின்றது.

தமிழ்த் தேசத்தின் உரிமையை வரையறுக்கும் தேசிய செயற்பாடுகள் அரசியல் சார்ந்து முன்னெடுக்கப்பட்டதே முதற்கட்டமான தேசிய எழுச்சியாகப் பதிவானது.

ஆங்கிலேயரால் வழங்கப்பட்ட சுதந்திர சிலோனில் தமிழ் மக்களின் தேசியம்சார் செயற்பாடுகள் அடக்கியொடுக்கப்பட்ட முனைவுகளால் அரசியல் போராட்டமொன்று தேசியத்தை நிலைநாட்டும் நோக்குடன் ஆரம்பமானது. ஆயுதம் தாங்கிய அரச அடக்குமுறைகளால் வெளிப்படையாகவும், சட்ட வரைமுறைக்குட்படாத வகையில் காடையர்களால் முன்னெடுக்கப்பட்ட அழித்தொழிப்பு நடவடிக்கைகளால் உட்கிடையாகவும் அவ்வரசியற் செயற்பாடுகள் நசுக்கப்பட்ட வேளையில், அயல் நாடான இந்தியாவின் ஆதரவுடன் ஆயுதப் போராட்டக்களமொன்று திறக்கப்பட்டதை அடுத்து ஆண்டு 2009 வரைக்குமான சுமார் முப்பதாண்டு காலப்பகுதியில் தமிழர்கள் தமது தேசியச் செயற்பாடுகளைத் தமிழ்த் தேசத்தை முன்நிறுத்தி மேற்கொண்டு வந்தனர்.

தேசத்தை இழக்கக்கூடாது என்பதை முன்வைத்தே இச் செயற்பாடுகள் யாவும் முன்னெடுக்கப்பட்டன என்பது இங்கு மிக முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இக்கணத்தில் 1997ம் ஆண்டு 09ம் மாதம் திருகோணமலை-புல்மோட்டைக் கடற்பரப்பில் வைத்து ஜப்பானியக் கப்பலொன்றின் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது என்பது தொடர்பாக அன்று வெளியான செய்திகளில் தமிழ்த் தேசத்திலிருந்து மண்ணை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என்ற அறிவிப்பு வெளியானதை நினைவு கூறலாம்.

மிகப் பலமான அவ்வாயுதப் போராட்டத்தினை அழித்தொழிப்பது மட்டுமல்ல, தமிழ்த் தேசிய வாதத்தினையும் தமிழ் மக்களிடம் இருந்து அழிப்பதன் ஊடாகவே சர்வதேச நலன்களை இலங்கையில் நிறுவ முடியும் என்பதைச் சரியாகக் கணக்கிட்டு நடத்தப்பட்ட இனவழிப்புத்தான் “முள்ளிவாய்க்கால்”.

ஆனால் 2009ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்த் தேசியவாதமும் அவ்வாதத்தின் ஊடாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற தமிழ்த் தேசமும் தமிழ் அரசியலில் தேர்வு செய்யப்பட்ட தலைமைகளால் கைவிடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

“சீனா வந்திருந்தால் இதனைவிடப் பணங்கரமாக இருந்திருக்கும்'' சம்பூரில் இந்தியாவினால் அமைக்கப்படவுள்ள அனல்மின்நிலையத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தின் போது ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் தெரிவித்துள்ளமையானது, தமிழ்த் தேசத்தினைக் கூறுபோட்டு விற்கும் சர்வதேசத்தின் வியாபாரத்திற்குத் துணைபோகும் செயற்பாடாகவும், தமிழ்த் தேசக் கோட்பாட்டைக் கைவிட்டுள்ள நிலைப்பாட்டின் தெளிவான வெளிப்பாடாகவுமே பார்க்கப்படவேண்டும்.

இவ்வாறு தேசிய எண்ணத்தைக் கைவிடுவதன் ஊடாக சிறுபான்மையினம் என்று தமிழர்கள் தம்மைத் தாமே அழைத்துக்கொள்ளவும், தாம் சிறீலங்காத் தீவில் வசிக்கும் ஏனைய இனங்களைப் போல சிறுபான்மையினம்தான் என்று ஏற்றுக்கொள்ளவும் தயாராகிவிட்டனரா?

சீனாவா, இந்தியாவா அல்லது பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவத்திருப்பதைப் போல அமெரிக்காவா திருகோணமலையில் காலூன்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் தமிழ்த் தேசியத்தின் நலனை முன்நிறுத்திப் பார்க்க வேண்டிய தந்திரோபாயத்தைக் கைவிடுதல் தான் தற்போதைய தமிழரின் அரசியல் சாணக்கியமாக உருவெடுத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## ஆடைத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது



திருகோணமலை, மூதூர் கிழக்கு சீதனவெளி கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள புதிய ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாட்டிவைத்தார்.

கடந்த புதன்கிழமை (2) நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், மாகாணசபை உறுப்பினர்களான கு.நாகேஸ்வரன், ஜெ.ஜெனார்த்தனன், அர்.எம்.அன்வர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்க எம்மால் முடியாது - கிழக்கு கல்வி அமைச்சர்

அச்சுதன்

கிழக்கு மாகாணசபையில் இரண்டு அமைச்சுக்களை த.தே.கூட்டமைப்பு பெற்றுள்ளது என்பதற்காக வாக்களித்த தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிட முடியாது என தெரிவித்தார் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி

கடந்த 29ம் திகதி திங்கட்கிழமை எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம் பெற்ற பொது மக்கள் குறை கேட்கும் கலந்துரையாடலின் போது உரையாற்றியவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

என்னிடம் வரும் விண்ணப்பங்களிற் பெரும்பாலானவை ஆசிரிய இடமாற்றம் தொடர்பானவையே. நாம் அதற்காகக் கல்வி அமைச்சைப் பொறுப்பேற்க-வில்லை. மாறாகக் கல்வி அபிவிருத்திக் குறிக்கோளுடனேயே நாம் செய்றபட வேண்டியுள்ளது. அமைச்சுப் பதவியை வைத்து எமக்கு கிடைக்கும் நிதியின் மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டுமே நாம் அபிவிருத்தி செய்து வருகின்றோம் எனக் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கணனி வடிவமைப்பாளர்களுக்கான வேலைவாய்ப்பு
போட்டோசொப் - கொரல்ட்ரோ -தமிழ் தட்டச்சு
தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை
அடிப்படைச் சம்பளம் ரூபா 10,000 + மேலதிக நேரக் கொடுப்பனவுகள்
அழையுங்கள் - 0777 555 738

## இந்திய , இலங்கைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் “உயிர்வரை ஏனோ” பாடல் வெளியீட்டு விழா

அச்சுதன்

சாய்மதுரம் கிரியேசன் தயாரிப்பில் ஸ்கை கிரியேசன் இணைந்து வழங்கும், இசையமைப்பாளர் பு. சாய்தர்சன் அவர்களின் இசையில் இயக்குநர் தம்பலகாமம் லு. சுஜீதன் அவரது இயக்கத்தில் ஈழத்து கலைஞர்களான ஜெராட், ரொசில்டா மற்றும், கிரிஷ், திவ்யா நடிப்பில் உருவான “உயிர்வரை ஏனோ......“ என்னும் வீடியோ பாடல் காணொலியும், இசையமைப்பாளர் தம்பலகாமம் சுஜீதனின் இசையில் உருவான “சிறுதூரம் நீயும் சென்றால்“ எனும் பாடல் கதம்பத்தின் (அல்பம்) ஆடியோ பாடலின் வெளியீடும் இன்று (05) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மணிவரை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் பிரதான கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் ஏனைய மாவட்டங்களில் இருந்து பல ஈழத்துக் கலைஞர்கள் கலந்து கொள்வதுடன் தென்னிந்தியச் சினிமாக் கலைஞர்களும் கலந்துகொள்ள இருப்பதாகத் தெரிவித்துள்ள ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள அழைத்துள்ளனர்.

## பொலி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

இவ்வாண்டின் இரண்டாவது “பொலி” சஞ்சிகை சித்திரை 15 இல் வெளிவர-வுள்ளது எனத் தெரிவித்துள்ள பொலி சஞ்சிகையின் ஆசிரியர் ஜெயாகரன் அதற்கான ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கவிதைகள், குறுங்கதைகள், குறுஞ்செய்திகளை போன்ற ஆக்கங்களை அனுப்ப முடியும் எனத் தெரிவித்த அவர் “பொலி” சஞ்சிகையின் துணை வெளியீடான மரங்கொத்தி செய்தி மடலுக்கு உங்கள் கட்டுரைகளை கொடுத்துதவுமாறும் கேட்டுள்ளார்.

ஏ4 அளவான காகிதத்தில் 2 பக்கங்களுக்கு மேற்படாமல், சமூக சீர்திருத்த மற்றும் முன்னேற்ற சிந்தனை-களை ஊட்டத்தக்கதாக கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

பொலி மற்றும் மரங்கொத்தி சஞ்சிகைகளுக்கான ஆக்கங்களை ஆசிரியர், பொலி சஞ்சிகை, இல 145 ஏ, பாண்டியன் தெரு, கட்டைப்பறிச்சான் என்ற அஞ்சல் முகவரிக்கு அல்லது jeyakaran1975@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## சேருவில் தொகுதி அமைப்பாளராக முன்னாள் காணி அமைச்சரின் மகன்



திருகோணமலை மாவட்ட சேருவில் தொகுதி சிறீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளராக முன்னால் மறைந்த காணி அபிவிருத்தி அமைச்சர் எம் கே ஏ டி எஸ் குணவர்த்தன அவர்களின் புதல்வர் நளின் மிள்ரோய் குணவர்த்தன சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்

ஹலீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## கடன் சுமையை தீர்ப்பதற்கான திட்டங்கள் குறித்து ஆய்வு


முன்னால் சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்த வேளையில் அபறப்பட்ட கடன் சுமை குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்றிற்காக நேற்று விசேட அமைச்சரவை கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தின் போது மகிந்த அரசினால் பெறப்பட்ட கடன்சுமையிலிருந்து எந்தளவு தீர்க்கப்பட்டுள்ளது, இன்னும் தீர்க்கப்பட வேண்டி உள்ள தொகை என்பன குறித்து நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். அத்துடன் பெறப்பட்ட கடன்களில் அரசாங்க கணக்கிற்குள் சேர்க்கப்பட்ட ஆயிரத்து நூறு மில்லியன் ரூபாய்கள் கடன் தொகையாக காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இக்கூட்டத்தின் போது இக் கடன் சுமையை தீர்ப்பதற்கான திட்டங்களும் அங்கீகரிக்கப் பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



## மறுதலித்தார் – பிரதமர்



ஊடக சுதந்திரத்திற்கான செயற் பாட்டுக்குழு, யாழ் ஊடக அமையம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உள்ளிட்ட ஊடக அமைப்புக்களினை சேர்ந்த பிரதிநிதிகளை கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிய போது, யாழ் குடா நாட்டில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரென எவரும் கிடையாது. அவ்வாறான எவரும் காவல்நிலையங்களில் பணியாற்றவில்லை என மறுதளித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு என அடையாளப்படுத்தி யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர்களை சிலர் அச்சுறுத்தி வருவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டினையே இவ்வாறு பிரதமர் மறுதலித்துள்ளார்.

எனினும் இது குறித்த விசாரணைகளை துரிதப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு குறித்த அமைச்சிற்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் மீண்டும் ஒருமுறை ஊடகத்துறைக்கு இருண்ட காலம் வர அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 82 வீதமானவை ஏழை மக்களின் வரிப்பணம் – அமைச்சர் சம்பிக்க



கொழும்பு, சரவணமுத்து விளையாட்டரங்கம் அருகில் நவீன வசதிகள் கொண்ட தொடர் மாடி குடியிருப்புத் தொகுதியொன்றுக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது, கொழும்பு நகர் மற்றும் அண்மித்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் உடற்பயிற்சி நடை பாதைகளின் பராமரிப்புக்காக ஏழைகளின் வரிப்பணம் செலவிடப்-படுவதாக சம்பிக ரணவக்க ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் சம்பிக ரணவக்க, கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உடற்பயிற்சி நடைபாதைகள் அமைக்கப் பட்டது. அவை தற்போதும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் பராமரிப்புக்கு செலவிடப்படும் பணத்தில் 82 வீதமானவை ஏழைகளின் வரிப்பணமாகும். அந்த வகையில் குறித்த நடை பாதைகளினால் பயன் அடையாத மக்கள் அவற்றைப் பராமரிப்பதற்கு வரிப்பணம் கட்டுகின்றனர் என சுட்டிக் காட்டினார்.

## வித்தியா கொலை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அறிக்கை சமர்ப்பிப்பு



யாழ்.புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சுவிஸ் குமார் உள்ளிட்ட 5 பேர் குற்றவாளிகள் என குற்றப்புலனாய்வு பிரிவினர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் வழக்கு தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினர் இதுவரையில் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில்,
வித்தியா கொலை வழக்கில் சுவிஸ்குமார் கொலைக்கு திட்டமிட்டுள்ளார். 2ம் சந்தேக நபர்களான தவக்குமார், ஜெயக்குமார் ஆகியோர் கொலைக்கு உடந்தையாக வித்தியாவை வழிமறித்து கடத்தியதுடன், 5ம், 6ம் சந்தேக நபர்கள் வித்தியாவை வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்ததாகவும் நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட 11ம் சந்தேக நபர் வித்தியா பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்படும் போது காவல் காத்ததாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் 10 சந்தேக நபர்களும் குற்றத்துடன் தொடர்புடையவர்கள் எனவும் காவல்துறையினர் கூறியுள்ளனர்.


இதேவேளை வித்தியா கொலைக்கான நீதி கிடைக்கும் என தெரிவித்திருக்கும் நீதிபதி வை.எம்.எம்.றியாட் வழக்கை எதிர்வரும் 18ம் திகதி வரையில் ஒத்திவைத்துள்ளார்.



## 32 நலன்புரி முகாம் மக்கள் அஹிம்சை போராட்டத்தில்

வலிகாமம்

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கிலுள்ள தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி 32 நலன்புரி முகாம்களை சேர்ந்த மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் கண்ணகி நலன்புரி முகாமில் இருந்து ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு நலன்புரி முகாமில் உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.
கடந்த டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஆறு மாத காலத்துள் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்திருந்தார். எனினும், அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் நம்பிக்கையை கேள்விக் குறியாக்கியுள்ளதாக நலன்புரி முகாம்களை சேர்ந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.
மேலும் உண்ணாவிரதத்தில் எந்தவித பயனும் கிடைக்காத பட்சத்தில் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமது காணிகளுக்குள் நீராலும் நிலத்தாலும் வெள்ளைக்கொடியோடு செல்வோம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



## சந்தேகத்தின் பேரில் இந்தியர் அறுவர் கைது



சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக ஸ்ரீலங்காவிற்கு வந்து கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்படும் இந்தியர்கள் அறுவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளவத்தை நகரிலுள்ள 7 மாடிக் குடியிருப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காகவே ஸ்ரீலங்காவிற்கு வந்திருப்பது இன்னும் உறுதி செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் அறுவரது வயிற்றுப் பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் இவர்களை ஸ்ரீலங்காவிற்கு அழைத்து வந்தவர்களை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப விசாரணைகளின் போது அவர்களின் விசா முடிவடைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர்ச் செய்திகள்

## மயிலினால் சரிந்த பேருந்து

கதுறுவெலையிலிருந்து கல்முனை நோக்கித் தனியார் பஸ் ஒன்று பயணித்துக்கொண்டிருந்த வேளை, வெலிகந்தப் பகுதியில் வைத்து மயிலொன்று வீதியின் நடுவில் திடீரெனப் பாய்ந்தமையால் சாரதியின் தடுமாற்றத்தால் கட்டுப்பாட்டை இழந்து பஸ் தடம்புரண்டதில் 40 பயணிகள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து, கடந்த புதன்கிழமை இடம்பெற்றதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த பயணிகள், பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.



## கன்னியா வெந்நீரூற்று 2017ல் மீண்டும் வழுங்கப்படலாம்

- சேனையூர் நிரூபர் -

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியை ஏற்கனவே பராமரித்து வந்த உப்புவெளி பிரதேசசபைக்கே மீண்டும் வழங்க வேண்டும். என மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் கோரிக்கை விடுத்தமைக்கு அமைய 2017ம் ஆண்டு முதல் உப்புவெளி பிரதேசசபைக்கு இதன் பராமறிப்பையும் வருமானத்தையும் வழங்க மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார சம்மதம் தெரிவித்துள்ளார்.

கடந்த 29ம் திகதி திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனனால் முன் வைக்கப்பட்ட பிரேரணை ஒன்றின் மூலம் இந்த சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல வருடங்களாக கன்னியா வெந்நீருற்று பகுதியை பராமரித்தும் அதன் வருமானங்களையும் பெற்று வந்த உப்புவெளி பிரதேச சபையிடம் இந்த உரிமையை யுத்த வெற்றியின் போது தொல்பொருள் திணைக்களம் தன் வசம் சுபீகரித்துக் கொண்டது. இந்நிலையில் தற்போதய நல்லாட்சியில் இதனை மீளவும் உப்புவெளி பிரதேச சபைக்கு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டமைக்கு, 2017ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இதன் பராமரிப்பையும் வருமானம் அறவிடும் பொறுப்பையும் உப்புவெளி பிரதேச சபைக்கு வழங்க மாவட்ட செயலாளர் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாக என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளதாக தெரிவித்தார்.

## சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது

- சேனையூர் நிரூபர் -

இரண்டு சிறுவர்களை அடித்து துன்புறுத்திய முச்சக்கரவண்டி சாரதியையும் சிறார்களின் தாயையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் டி.சரவணராஜா கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

07 வயது மற்றும் 05 வயது சிறார்களின் தந்தை வெளிநாடு சென்ற பின்னர் தாயார் முச்சக்கரவண்டி சாரதியுடன் கள்ளத்தொடர்பினை பேணி வந்ததாகவும் அதனையடுத்து, சிறார்களின் தந்தை வெளிநாட்டிலிருந்து வருகை தந்து தமது இரண்டு பிள்ளைகளையும் மீட்டு தருமாறு கூறி திருகோணமலை தலைமையக காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அம்முறைப் பாட்டையடுத்து முச்சக்கரவண்டி சாரதியையும் சிறார்களின் தாயையும் நீதிமன்றில் ஆஜர்செய்து சிறார்களை நேரில் விசாரணை செய்த நீதவான் டி.சரவணராஜா தாயையும் கள்ளக் காதலனுக்கு துணை வழங்கியதாக தெரிவித்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## சட்டவிரோத பன்றி இறைச்சி வைத்திருந்தவர் கைது

சட்டவிரோதமாக இரண்டு கிலோ பன்றி இறைச்சியை வைத்திருந்த 60 வயதுடைய ஒருவருக்கு 27 ஆயிரம் ரூபாய் அபராதத்தை குச்சவெளி நீதிமன்ற நீதிவான் ஹயான் மீ ஹகசே, கடந்த வியாழக்கிழமை விதித்துள்ளார்.

மேலும், அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மூன்று மாதம் சிறைத்தண்டனை அனுப்பவிக்க நேரிடுமெனவும் நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை, புல்மோட்டைப் பகுதியிலுள்ள அவரது வீட்டில் இரண்டு கிலோ பன்றி இறைச்சியை வைத்திருந்த மேற்படி நபர் காவல்துறையினரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காணிகளை விடுவிக்கும் வரை தன்னிறைவு கிட்டாது.

தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளை படையினரும் பெரும்பான்மையின மக்களும் கையகப்படுத்தியிருக்கும் வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயத்துறையில் மேம்பாடும் தன்னிறைவும் காணமுடியாதென எழுத்தாளரும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் [illegible] தலைவருமான [illegible] தேவகடாட்சம் தெரிவித்தார்.

# மலைமுரசு MALAIMURASU
# இலங்கைச் செய்திகள்

## இனப்பிரச்சினையை தீர்க்க யப்பான் ஆதரவு

இனப்பிரச்சினை உள்ளிட்ட வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒத்துழைப்புகளை வழங்க ஜப்பான் தயாராக இருப்பதாக தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்காவிற்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமா மாவை சேனாதிராஜாவை அவரது அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கு கிழக்கு மக்களின் மீள் குடியேற்றம், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை மீள பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தான் ஜப்பானிய தூதுவரிடம் எடுத்துரைத்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



## விரைவில் – காணி உரிமை சட்டமூலம்

காணி உரிமையை வழங்கும் சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

காணி தொடர்பில் வறிய மக்களுக்கு உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதே குறித்த சட்ட மூலத்தின் பிரதான நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னார் மனித புதைகுழி விசாரணைக்கு அரச சட்டத்தரணி நியமனம்

மன்னார் மனிதப் புதைகுழி விசாரணைகளில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதால், அரச சட்டத்தரணி ஒருவரை நியமிக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

மனிதப் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட 87 மனித மண்டையோடுகள் மற்றும் எச்சங்களின் கால எல்லையை வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து பரிசோதிக்க முயற்சிப்பதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர்.


இந்நிலையில், பெய்ரூட், ஆர்ஜன்டீனா மற்றும் குவாத்தமாலா ஆகிய நாடுகளின் நிறுவனங்களின் தூதரகங்கள் இலங்கையில் இல்லாதபடியால், அந்த நாடுகளிலுள்ள நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.



இந்த விடயத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதால், அதுகுறித்து சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அறிவுரைக்கமைய வழக்கில் ஆஜராவதற்காக அரச தரப்பு சட்டத்தரணியை நியமிக்குமாறும் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் 4ம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

## வீசா நடைமுறையில் தளர்ச்சி – மலேசியா



இலங்கையர்களுக்கான வீசா நடைமுறையை தளர்த்துவதற்கு மலேசிய அரசாங்கம் உறுதியளித் துள்ளது. இதற்காக சிவப்புப்பட்டி மற்றும் ஆவணக்கோரல்களில் குறைப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாக மலேசிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மலேசியாவை பொறுத்தவரை இலங்கை முக்கிய சந்தை என்பதால், இலங்கையர்கள் மலேசியா வருவதற்கு இலகுவான வழிமுறைகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த நாட்டின் சுற்றுலாத்துறை பணிப்பாளர் டல்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் மலேசியாவுக்கு 52 ஆயிரம் இலங்கையர்கள் பயணம் செய்தனர். வாராந்தம் கொழும்புக்கும் மலேசியாவுக்கும் இடையில் 38 நேரடி விமானச்சேவைகள் இடம்பெறுகின்றன என்றும் டல்ஜித் சிங் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# உலகச் செய்திகள்

கொங்கோ

## தொடரும் இராணுவ கூட்டுறவு

கொங்கோ ஜனநாயகக் குடியரசுடனான இராணுவக் கூட்டுறவை விரைவில் மீள ஆரம்பிக்கவுள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கொங்கோவின் கிழக்குப் பகுதியிலுள்ள போராளிகளைப் போரிடுவதற்காகவே இந்தக் கூட்டுறவு மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. மனித உரிமைகள் மீறல்களுக்கான ஐ.நா பட்டியலில் காணப்படும் இரண்டு தளபதிகள், போராளிகளுக்கெதிரான மோதலுக்குத் தலைமை தாங்க நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்தாண்டு பெப்ரவரியுடன், கொங்கோவுடனான இராணுவக் கூட்டுறவை ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைகள் இரத்துச் செய்தன. இந்நிலையிலேயே, அடுத்த சில நாட்களில் இவை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக, அந்த சிரேஷ்ட அதிகாரி, பெயரைக் குறிப்பிடாது தெரிவித்தார். இந்த இராணுவக் கூட்டுறவு, உகண்டாவின் ஏ.டி.எப் போராளிகள், ருவன்டாவின் விடுதலைக்கான ஜனநாயகப் போராளிகள் அமைப்பின் போராளிகள் ஆகியோருக்கு எதிரான போராட்டத்திலேயே, இக்கூட்டுறவு முக்கிய கவனத்தைச் செலுத்துமென அறிவிக்கப்படுகிறது.

பெருவில்

## வெப்பநிலை ஏற்றத்தாழ்வு இடம்பெறலாமென எதிர்பார்ப்பு

பெருவில் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ளப்பெருக்கினால் 11 பேர் உயிரிழந்ததுடன், 5,181 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 588 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் அந்நாட்டு தகவல்கள் குறிப்பிடுகின்றன. பெருவின் 42 பிரதேசங்களில் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டன. போக்குவரத்து நடவடிக்கைகளும் முடங்கியுள்ளமையால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. கடந்த 15 வருடங்களில் இல்லாத வகையில் இம்முறை, எல் நினோ எனப்படும் முக்கியமான வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறக்கூடும் என உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


கனடா

## காபன் விலையை நிர்ணயிக்க புதிய பொறிமுறை

காபனுக்கு விலையை நிர்ணயிக்கும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ, நாட்டின் 10 மாகாணங்களின் தலைவர்களை வலியுறுத்தியுள்ளார்.

மாகாணத் தலைவர்களுடன் நடத்தப்பட்ட கடினமான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து எட்டப்பட்ட விட்டுக்கொடுப்புக்களுடன் கூடிய உடன்படிக்கை தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் நாடளாவிய ரீதியில் காபனுக்கு ஒரே விலையை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு பல மாகாணத் தலைவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு பதிலாக ஒவ்வொரு மாகாணங்களிலும் காணப்படும் விசேட சூழ்நிலைக்கு ஏற்றவாறு காபன் விலையை நிர்ணயிக்கும் பொறிமுறைக்கு இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.



## அதிகூடிய தடைகள் விதிக்கப்பட்ட நாடானது வட கொரியா



வட கொரியா

வடகொரியா மேற்கொண்ட அணுகுண்டுச் சோதனை, ஏவுகணை ஏவுதல் ஆகியவற்றுக்காக, வடகொரியா மீது கடுமையான தடைகளை விதிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அமெரிக்காவும் வடகொரியாவின் பிரதான தோழமை நாடான சீனாவுக்கு மிடையில், 7 வாரங்களாக மேற்கொள்ளப் பட்ட கடுமையான பேரம்பேசலைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இந்தத் தீர்மானம், ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. புதிய நடவடிக்கைகளின் அடிப்படையில், வடகொரியாவிருந்து வரும், வடகொரியாவுக்குச் செல்லும் அனைத்துப் பொருட்களையும், அனைத்து விமான நிலையங்களிலும் துறைமுகங்-களிலும் சோதிக்க வேண்டுமென அனைத்து நாடுகளையும் கோருகிறது. அத்தோடு, நிலக்கரி, இரும்பு, இரும்புத் தாது, ஏனைய கனிமங்கள் ஆகியவற்றை வடகொரியாவிலிருந்து இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்படுவதோடு, றொக்கெட் எரிபொருள் உட்பட விமான சேவைக்குப் பயன்படும் அனைத்து எரிபொருட்களையும் வடகொரியா வுக்கு ஏற்றுமதி செய்யவும் தடை விதிக்கப்படுகிறது. நாடொன்றின் மீது விதிக்கப்பட்ட அதிகபட்சத் தடை இதுவாகும். இந்தத் தடைகளை வரவேற்றார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. இந்தத் தீர்மானத்தை, தென்கொரியா உள்ளிட்ட ஏனைய பல நாடுகளும் வரவேற்றுள்ளன. இவ்வாறான தடைகளை விதித்து சில மணிநேரங்களில், வடகொரியா, தனது கிழக்குக் கடலோரத்திலிருந்து குறுந்தூர எறிகணைகளைக் கடலுக்குள் ஏவியது. ஐ.நா தீர்மானத்துக்குப் பதிலடி வழங்கும் முகமாகவே இந்த எறிகணைகள் ஏவப்பட்டதாகக் கருதப்படுகிறது. 100 தொடக்கம் 150 கிலோமீற்றர் எறிபரப்புடைய 6 எறிகணைகள், கடலுக்குள் ஏவப்பட்டதாக, தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## அதிகரிக்கும் கௌரவ கொலைகள்

பாகிஸ்தான்


பாகிஸ்தான் தலைநகர் லாகூரைச் சேர்ந்த முஹமது ரஹ்மத் என்பவர் வெளியில் சென்று விட்டு தாமதமாக வீடு திரும்பிய 18 வயது தனது மகள் கோமல் பீபியைக் கௌரவக் கொலை செய்துள்ளார். நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் ஆத்திரமடைந்து துப்பாக்கியால் மகளைச் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும், கொலையைப் புரிந்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் முஹமது ரஹ்மத். இது குறித்த விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அவுஸ்திரேலியா

## ஆஸிக்கு கொண்டு செல்லப்பட்டது விமான சிதைவுகள்

கிழக்கு ஆபிரிக்கக் கரையோரத்தில் கண்டெடுக்கப்பட்ட விமானச் சிதைவுகள், காணாமல்போன மலேஷிய விமானமான MH370 இனுடையதா என்பதைக் கண்டறிவதற்காக, அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல்போன இவ்விமானம் தொடர்பாகத் தொடர்ந்தும் மர்மம் நீடிக்கின்ற நிலையில், மொஸம்பிக் நாட்டுக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட இச்சிதைவுகள், அவ்விமானத்தினுடையவை எனச் சந்தேகிக்கப்படுகின்றன.



இவ்விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மலேஷிய போக்குவரத்து அமைச்சர் லியோ தியோங் லாய், கண்டெடுக்கப்பட்ட விமானச் சிதைவுகள், MH370 விமான வகையான போயிங் 777 வகை விமானத்தினுடையதாக இருக்கலாம் என்பதற்காக அதிகபட்ச வாய்ப்புகள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

கருத்துத் தெரிவித்த அவுஸ்திரேலிய போக்குவரத்து அமைச்சர் டரன் செஸ்டர், கண்டெடுக்கப்பட்டுள்ள விமானச் சிதைவுகள், அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், அவுஸ்திரேலிய, மலேஷிய அதிகாரிகளால் ஆராயப்படுமெனவும் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி காணாமல் போயிருந்த ஆர்370 விமானத்தில், விமானப் பணியாளர்கள் உட்பட 239 பேர் பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜோர்தான்

## ஐ.எஸ்.ஐ தாக்குதல் முறியடிப்பு

ஜோர்தானின் வடக்கு நகரமான இர்பிட் நகரத்தில் பலஸ்தீன அகதி முகாமில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப் பட்டுள்ள தொடர் தேடுதல்களினால், ஐ.எஸ்.ஐ.எஸ் குழு சார்பில் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதல் திட்டங்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக ஜோர்தான் தெரிவித்துள்ளது. மேற்கூறப்பட்ட இடத்தில் இடம்பெற்ற மோதல்களில் ஜோர்தானிய பாதுகாப்பு படைகளின் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதோடு, பொதுமக்கள் இரண்டு பேரும் காயமடைந்துள்ளனர். இர்பிட்டில் உள்ள மக்கள் வசிப்பிடமொன்றில் சந்தேகத்துக்-கிடமான ஆயுத-தாரிகளை பின்தொடர்ந்ததாகவும், அவர்கள் சரணடைய மறுத்தமையடுத்து, தானியங்கி ஆயுதங்கள் மூலம் பாதுகாப்பு படைகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக தெரிய வருகின்றது.

## ஜிகாதிகளுக்கே சொத்தில் பெரும்பகுதி

அல் கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவராக செயற்பட்டு, அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு காரணமாக இருந்த ஒசாமா பின் லேடன், 2011ம் ஆண்டு அமெரிக்க சிறப்பு அதிரடிப் படையினரால் பாகிஸ்தானில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அவர் கொல்லப்பட்ட வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட 113 ஆவணங்களில் சிலவற்றை அமெரிக்கா தற்போது வெளியிட்டுள்ளது. இந்த ஆவணங்களில் ஒன்றில், அவர் தான் கொல்லப்பட்டுவிட்டால் அவரது சொத்துக்களில் பெரும்பகுதியை ஜிகாதிகளுக்கு செலவிடுமாறு குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 29 மில்லியன் டொலர் சொத்துக்கள் சூடான் நாட்டில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# சீக்கா வைரஸ் (Zika Virus)

வைத்திய கலாநிதி திருமதி ஜமுனா சிவசங்கரன்
மருத்துவமனை திட்டமிடல் வைத்திய அதிகாரியும்
இனவிருத்திச் சுகாதார வைத்திய அதிகாரியும்
பொது மருத்துவனை, திருகோணமலை

சீக்கா வைரஸ் நோயினால் பாதிப்புற்ற கர்ப்பிணித் தாய்மார்கள் ஈன்ற குழந்தைகளின் தலைகள் அளவில் சிறியவையாக (Microcephaly) இருக்கின்றன. எனினும், Zika virus இற்கும் Microcephaly இற்குமான தெளிவான தொடர்புகள் இதுவரை ஆதாரப்படுத்தப்பட வில்லை என்றும் இவை இரண்டிற்குமான தொடர்புகளை அறிவதற்கு மேலும் மருத்துவ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

### நோயைக் கண்டறிதல்

Zika virus தொற்றானது குருதிப் பரிசோதனை மூலம் கண்டறியப்-படுகிறது. குருதி மாதிரிகளிலிருந்து PCR (Polymerase Chain Reaction) பரிசோதனைமுறை மூலம் வைரஸ் பிரித்தெடுக்கப்பட்டு கண்டறியப்படுகிறது. இப்பரிசோதனை முறை இலங்கையில் பல சிச்சை நிலையங்களில் காணப்படுகின்றன. நிணநீர் பரிசோதனை (Serology) மூலமும் இந்நோய் அறியப்பட்டாலும் டெங்கு, மஞ்சட் காய்ச்சல் போன்றவற்றிலிருந்து இந்நோயை பிரித்து இனங்காணுவது கடினமாகும்.

### தடுப்புமுறை

நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதே மிகப் பிரதானமான தடுப்பு முறையாகும். நுளம்புகளை விரட்டும் இரசாயனங்களைப் (Repellent) பாவித்தல், இளம் நிற உடைகளை ஓரளவிற்கு உடலை நன்றாக மூடி அணிதல் (காலை, மாலை வேளை களிலாவது), கதவு, யன்னல்களை மாலை வேளைகளில் மூடிவைத்தல். நுளம்பு வலைகளுக்குள் உறங்குதல் என்பனவும் நோய்த்தொற்றைத் தவிர்க்கும் வழிமுறைகளாகும். இதன் மூலம் நுளம்பிற்கும் மனிதனுக்கும் இடையேயான தொடர்பு தவிர்க்கப்பட்டு, நோய்ப்பரவல் தடுக்கப்படலாம்.


Zika virus பரம்பலடைந்த நாடுகளிலிருந்து வருபவர்கள் நோய்க்குரிய பரிசோதனைகளை (Sereening) மேற்கொள்ளல், பாதுகாப்பான உடலுறவு மற்றும் பாதுகாப்பான இரத்தப் பரிமாற்றம் என்பனவும் எம்மை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளாகும்.

இந் நோய்த்தொற்றானது கர்ப்பிணித் தாய்மார்களினுடாக சிசுக்களில் நிரந்தர பாதிப்புக்கள் மற்றும் செயலிழப்புக்களை ஏற்படுத்துவதனால், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான நோய்த்தடுப்பு முறை மிக நேர்த்தியாகப் பேணப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். எனினும், குழந்தைகளுக்கு நோயுற்ற தாயிடமிருந்து தாய்ப்பாலூட்டுவதன் மூலம் நோய் பரவியதற்கான எந்தவொரு சான்றும் இதுவரை கண்டறியப்படவில்லை.

### சிகிச்சை

உண்மையில் சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) கருவிலிருக்கும் சிசுக்களைத் தவிர, ஏனையவர்களுக்குப் பாரதூரமற்ற ஒரு நோயாகும். எனவே, இதற்கென விசேட சிகிச்சை ஏதும் வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை. இதற்குரிய தடுப்பூசியும் இல்லை. எனினும் போதுமான அளவு ஓய்வும் நீராகாரமும் நோயாளிக்கு வழங்கப்படவேண்டும். அத்தோடு உட ல்நோவுக்கும் காய்ச்சலுக்கும் பொதுவான மாத்திரைகள்மூலம் சிகிச்சையளிக்க முடியும். ஆனால் குருதிக் கசிவுகள் இருப்பின் சிகிச்சையின்போது அஸ்பிறின் வகை மாத்திரைகளைத் தவிர்ப்பதோடு கட்டாயமாக மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும்.

எனவே மக்கள் சீக்கா வைரஸ் காய்ச்சல் பற்றிய தேவை-யற்ற பயபீதிகளைத் தவிர்த்து ஆக்கபூர்வமான நோய்த்தடுப்பு வழிகளையும் சிகிச்சை முறைகளையும் பின்பற்றுவதன் மூலம் இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெறமுடியும்.




# நிகழ்வுகள்

## நூல் அறிமுக விழா - மட்டு




கவிகுர் கொலின்

மட்டக்களப்பு மாநகர சபையின் அனுசரணையுடன் மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்திய பௌர்ணமி கலை நிகழ்வின் 18வது நிகழ்வு கடந்த 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் திருமதி.ரூபி வலென்ரீனா பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் திரு.வி.மைக்கல் கொலினும், நூலாசிரியர் அறிமுகத்தை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தன் சிறிதரனும் நிகழ்த்தினர். நூலின் முதல் பிரதியை மகப்பேற்று மருத்துவ நிபுணர் மார்க்கண்டு திருக்குமார் பெற்றுக் கொண்டார்.

நூலினுடைய மதிப்பீட்டுரையை பேராசிரியர் செ.யோகராசாவும், வாழ்த்துரைகளை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் திரு.ஆறுமுகம் சௌந்தரலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் திரு.சாரங்கபாணி அருள்மொழி ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் தேநாயகம் தபேந்திரன் அவர்கள் ஆற்றினார்.




## இரத்ததான முகாம் - கந்தளாய்

முஸ்லீப்பொத்தானை நிருபர்

கந்தளாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கந்தளாய் சன்ரைஸ் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு தி/பேராற்று வெளி முஸ்லீம் மகா வித்தியாலத்தின் அதிபர் எஸ்.சரஷ்தீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு திருகோணமலை இரத்த வங்கி டொக்டர் நுவான் மற்றும் சன்ரைஸ் கழகத்தின் தலைவர் எம்.ஏ.எம் ஹில்மி அவர்களும் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வானது கடந்த 28-02-2016 ஆரம்பமான போது இதில் சுமார் நூறிற்கும் அதிகமான நபர்கள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது



## சிறுவர்களின் சந்தை

முஸ்லீப்பொத்தானை நிருபர்

கடந்த 2016.02.27 அன்று கந்தளாய் பேராற்று வெளி சாஹிரா பாலர் பாடசாலையில் மாணவர்களால் சிறுவர் சந்தை நிகழ்வொன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜுச.அருண சிறிசேன அவர்களை பாலர் பாடசாலை மாணவர்கள் வரவேற்றனர். வரவேற்பினைத் தொடர்ந்து பிரதம அதிதியினால் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சிறுவர் சந்தையில் பல்வேறு விதமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டி-ருந்தன. அன்று பெற்றோர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## "பாடசாலை உளவியல்" வெளியீட்டு விழா

எழுத்தாளரும் ஆசிரியருமான அ.வா.முஹ்சீன் எழுதிய பாடசாலை உளவியல் என்ற நூலினது வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது முதன்மை அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.முகம்மது லாஹிர், முன்னாள் நகரபிதா க.செல்வராஜாவும், புனித குசையப்பர் கல்லூரியின் அதிபர் வன பிதா ஏ.பொன்சியன் அவர்களும் இந்துக்



கல்லூரியின் அதிபர் எஸ்.[illegible]மசீலன், எழுத்தாளர் திருமதி. உ.பிரதீபா ஆகியோர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயானங்களின் மீள் குரல்



மண்ணுக்குள் துயிலும்
மறத்தமிழன் வீரமெல்லாம்
மாறாத வலியுடன்
மாவீரதினமென
மறுகுரல் எழுப்புகின்றனரோ..!

எடுத்த சமர்
கொடுத்த குரல்
விடுத்த கோரிக்கை
தடைதகர்த்த போரியல்
மண்ணுக்குள் மாண்டாலும்
மாளாது மாவீர கணைகள் ,,!

விழுந்தாலும் விழுதுகள்
எழுந்தாலும் விதைகள்
மடிந்தாலும் மாவீரகள்
மண்ணுக்கு உரமான தமிழ் வேங்கைகள்
பொன்னான காலங்கள்
புழுதிபடியும் வரலாற்று படிவங்கள்
இவை சொல்லும் மாவீர வரலாறுகள்.!

தண்ணீரில் கலந்துவிட்ட குருதிக்கடல்
செந்நீராய் தமிழருக்கு பாய்கிறதே
கந்தக வாடையில் கருகிய உயிர்கள்
காற்றோடு சுவாசமாய் இருக்கிறதே
மண்ணோடு புதையுண்ட பலவீரம்
மரணித்தும் மரணிக்காது துடிக்கிறதே,,!

கொஞ்சமா நஞ்சமா
கொலையுண்ட மானிடர்கள்
கொந்தளிக்கும் உள்ளமாய் இன்னும்
கூக்குரல்கள்
எண்ணிலடங்கா உயிர்பலிகள்
எதைச்சொல்லி அழுவார்கள் மயான
மாவீரர்கள்,,,!

ஆண்ட பரம்பரை
ஆளும்வரை
மாண்ட தமிழினம்
மீளும்வரை
கொண்ட கனவுகள்
நனவாகும் வரை
கொள்கைஎன்பது

மெய்ப்படும் வரை
மயானங்களின் மீள்குரல்
கேட்டுக்கொண்டே தான் இருக்கும் .!

காலத்தின் படிவத்தில்
காட்சிகள் மறையலாம்
காலச்சுவடுகள் மறையாது,,!

திருகோணமலையிலிருந்து
கவிக்குயில் சிவரமணி

## விடோம்!

தமிழ் "வா" என்றது
தனியனாய்ப் போனேன்!
"அமுது நான்" என்றது
ஆமாம் என்றேன்!

கடல் என்னைப் பாதியாய்க்
கரைத்தது என்றது!
வடமொழி எந்தனை
வாட்டிய தென்றது!

உண்மை – பாவாணர்
உரைத்தார் என்றனன்!
திண்ணிய நெஞ்சினைத்
திரும்பவும் பெற்றுள்ளாய்!

வாழ்வாய் குறளுடன்
வாழ்த்துகிறேன் யான்!
வீழ்ந்திட மீண்டும்
விடோம் என்றனே!

– – தாமரைத்தீவான் – –
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

## எதுவும் நடக்கலாம் ?

சந்திர சூரியர்
மாறி உதிக்கலாம்
சாக்கடை மாறி
பூக்கடையாகலாம்
மந்திர பலத்தால்
மாங்காயை விழுத்தலாம்
மலடியைக் கூட
பிள்ளை பெற வைக்கலாம்

அந்தரத்தில் தொங்கு
பாலம் அமைக்கலாம்
ஆண்டியும் ஒரு நாள்
அரசனாய் வரலாம்

செந்தணல் மீது
மிதித்து நடக்கலாம்
செய்வினை சூனியம்
செயித்தானைக் கட்டலாம்

மந்தியைப் போல்
கட்சி மாறலாம் - ஆசையில்
மந்திரிப் பதவிக்காய்
பச்சோந்தியாகலாம்

இந்திர லோகத்தையும்
தரிசித்து வரலாம் - இன்று
இலங்கையைச் சுற்றி
எங்கும் வரலாம்

எதுவும் நடக்கலாம்
இன்றுள்ள சூழலில்!

இனப்பிரச்சினைக்கு
இணக்கமான இனிய
தீர்வொன்றைத் தவிர!

சுதந்திரமாக இதந்தரும்
சமாதானத் தீர்வு விரைவில்
வெற்றிபெற்றிட நல்ல
விடியல் கிடைக்குமா?

எதுவும் நடக்கலாம்
இன்றுள்ள சூழலில் இங்கே!

ஏக்கம் நாளிலிருந்து
கவிக்குயிலன் அ.அரசரத்தினம்

## கவி முரசு

## ஒரு வாழைப்பழம்

(மாயன்)

அது மிக அழகானது
மரத்திலிருக்கும் போது . . .
மெதுவாய் வாழை
வெளித்தள்ள
தேன் பூக்களை
வண்டுகளுக்காய்
சிதறடித்துப் பிறக்கும்
குழையின் - சிறு
விரல்களாய்க் காய்

பிஞ்சிற் கரும் பச்சையேறி -
ஏறிப் பெரிதாக ஆக
சூரிய ஒளிபட்டு
மினுங்கும் .. நீர்
இறைத்த மனிதரெல்லாம்
நின்று பார்த்து
மகிழ்ந்து மனம்குலாவிப்
போகப் - பின் நாளில்
நிறம் மாறும்.

குரங்கின் கண் படாமற்
காப்பாற்ற கூடையிட்டு
மறைக்கப்பட்டு - மஞ்சள்
மிகவேறிய ஓர் நாளில்
வெட்டி

வேறு இடம் போகும்
வாழைப் - பழம்

மணம் பரப்ப
உடையோன் - அவன் பெயரைப்
பின் பார்ப்போம்
அழுங்காமல் உரிப்பான்
ஆடை
அதன் ஆசை ஏதென்று
அறியாமல்

நக்கி - கடித்து, சுவைத்துச்
சிதையும் வாழை - அவன்
வெறியேறிய வாய்க்குள் . . .

எறிந்த தோலிலிருந்து
மீண்டும் வாருரித்துத் தின்று
களைப்பாறுவான். வீணி வழிய
அவன்
பெயர்கள் பலவுண்டு
கணவன், பெரியப்பன்
மாமன், மச்சினன்
மறுவீட்டுக்காரன் - ஏன்
வாத்தியார்கள் கூட

ஊரான் வாழை
திண்ண

வீணி வழித்துக்
கிடப்பர்

தோழி . . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண சிறைச்சாலையின் வெளித்தெரியா உண்மைகள்

நேரடித் தகவல்கள் புலோலியூர் காவியா

நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட்டு நாட்டினுடைய இறைமை பேணப்படும் பட்சத்திலேயே குடிமக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியும். அதற்கமையவே எமது ஜனநாயக நாட்டில் சட்ட ஆட்சி நடைமுறைப் படுத்தப்படுகிறது. அத்தகைய சட்ட ஆட்சியின் சட்டங்களுக்குள் குற்றங்கள் தணியும் பொருட்டு சிறைச்சாலை நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

அந்த வகையில் யாழ் குடாநாட்டில் ஒரு நிரந்தர சிறைச்சாலை தேவை என்பது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண பிரதேசத்தை அண்டிய கொட்டடிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறைச்சாலையை முன்னாள் சட்ட ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் திலக் மாறப்பண கடந்த 2015 செப்ரம்பர் மாதம் முதலாம் திகதி திறந்து வைத்தார்.

இதனை "யாழ்ப்பாணத்தில் பல மில்லியன் ரூபா செலவில் அதி நவீன வசதிகளுடன் கூடிய இலங்கையின் முதலாவது சிறைச்சாலை" திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது. எத்தனை அதிநவீன சிறைச்சாலைகள் இருந்தாலும் அது கைதிகளை அடைத்து வைக்கும் சிறு கூடம் தானே என எவரும் அதனை தேடி அறிந்திருக்க வாய்ப்பில்லாது போனமை பலருக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

## சிறைச்சாலைக் கட்டடம்

பொதுமக்கள் பயன்பாட்டிற்கென செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திகளும் நிர்மாணங்களும் அந்தந்த பிராந்தியங்களின் பௌதிக வளங்களும் சுற்றுச்சூழலுக்கு எற்ப நன்கு திட்டமிட்டு கட்டமைக்கப் படுகின்ற போது தான் அவை மனித பாவனைக்கு உகந்ததாக அமைய முடியும். ஆனால் யாழ்ப்பாண சிறைச்சாலை அமைப்பில் அவ்வாறான விதிகள் எதுவும் கடைப்பிடித்து இருப்பதாக தெரியவில்லை. கட்டடத்தின் கட்டுமான வேலைகள் மற்றும் பூச்சு வேலைகளைப் பார்க்கும்போது கட்டுமானப் பயிற்சி பெறுவோரால் கட்டிப் பழகியதைப் போன்று நேர்த்தியற்றுக் காணப்படுகின்றது.

கட்டடங்களும் மதில் சுவர்களும் வெளியிணைப்பு பொறிமானங்களும் மிகக் குறுகிய காலத்துள் வெடிப்புகள் உடைவுகள் ஏற்பட்டு ஒப்பந்தக்காரரின் கட்டுமானத் தரத்தினை கட்டியம் கட்டத் தொடங்கி விட்டது. சிறைச்சாலை கட்டடத்தின் அமைப்பு முறையும் கூட கைதிகளின் நலனை கருத்தில் கொண்டு அமைக்கப் பட்டுள்ளதாக தெரியவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 350 வரையிலான கைதிகளுக்கு என்று மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை மட்டும் கட்டிவிட்டு அலுவலக பாவனைக்கு என தேவைக்கு அதிகமான வேறு பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வெறும் வெட்டவெளியில் அமைந்துள்ள சிறைச்சாலை வளாகத்துக்குள்ளேயும் சரி வெளியேயும் சரி எந்தவித மரஞ்செடி கொடிகளும் இல்லாது வற்றி வரண்டு போய் கிடக்கின்றது. குறைந்தது மனதிற்கு இதமூட்டும் பூங்கன்று ஒன்றையேனும் காணக்கிடைக்கவில்லை. கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதிகளுக்கும் செல்களுக்குள்ளும் யன்னல் என்று சொல்ல முடியாத சிறிய கம்பித் துவாரங்களையும் ஒப்பனை என்ற பெயரில் காற்று புக முடியாதவாறு மூடி பிளேட் அமைக்கப்பட்டுள்ளது.

தேவையானதும் தேவையற்றதுமான இடங்களில் சுமார் 96 CCTV கமராக்களும் சில ஒலிபெருக்கிகளும் புதிய ரக மின்குமிழ்களும் பொருத்தப்பட்டு இருக்கின்றன. ஆனாலும் அமைத்து 6 மாதம் முடிவதற்குள் அவற்றில் பலதும் செயலிழந்து கிடக்கின்றதை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அத்தனை தரம் பொருந்திய இலத்திரனியல் பொறிகளும் அவை காற்றோட்ட வசதியற்ற இடப்பற்றாக்குறையும், தற்கால வரட்சியும் கைதிகளுக்கு சொறி சிரங்கு போன்ற தாராளமான சரும வியாதிகளையும் தானம் பண்ணியுள்ளமை அருவருக்கத் தக்கது. இரவு நேரங்களில் கைதிகள் உணவு உண்பதற்கோ புத்தகம் வாசிப்பதற்கோ எழுதுவதற்கோ வெளிச்சம் தரக்கூடிய வகையில் மின்குமிழ் பொருத்தப்படவில்லை.

சீரான கழிவு நீர் வடிகால் அமைப்பு முறை கையாளப்படாததால் நீர் குழாய்களும் திண்ம திரவ கழிவு குழாய்களும் மலசல குளியல் கூடங்களும் கசிந்த வண்ணம் சுற்றுச்சூழலை மாசுபடுத்த முனைகிறது. இவ்வாறு நவீன ரக புதிய சிறை கூடத்தின் பல்வேறு குறைபாடுகளையும் கைதிகள் சிறைச்சாலை அத்தியாட்சகரின் கவனத்திற்கு உட்படுத்தியதன் விளைவாக திட்ட ஒப்பந்தகாரர்கள் அழைக்கப்பட்டு தற்காலிகமாக திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சிறைச்சாலை நிர்வாகம்

சுமார் 350 வரையிலான கைதிகளை பராமரிப்பதற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவரின் கீழ் பிரதான ஜெயிலருடன் ஐந்து இதர ஜெயிலர்களும் 92 வரையிலான ஆண் சிறை காவலர்களும் 14 பெண் சிறை காவலர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். கைதிகளின் உடல் உள சுகாதார மேம்பாட்டு நலன்புரி விடையங்களை மேற்கொள்வதற்கென ஒரு பெண் மருத்துவரும் தாதியரும் மூன்று நலன்புரி உத்தியோகத்தரும் பணியாற்றுகின்றனர்.

இவர்களின் பணித்திறமை செயலாக்கம் கண்காணிக்கும் பொருட்டு கொழும்பு சிறைச்சாலை தலைமையகத்தில் இருந்து சிறைச்சாலை ஆணையாளர் [illegible] ஒரு முறையேனும் [illegible]

இத்தகைய நிர்வாக கட்டடங்களுக்குள் பராமரிக்கப்படும் சிறைக்கைதிகளின் நிலை கவலையளிப்பதாக இருக்க முடியுமா? நியாயமான கேள்விதான் இக் கேள்வியே இத்தகைய கட்டுரை ஒன்றை வரையத் தூண்டியுள்ளது.

இலங்கையில் உள்ள எந்த ஒரு சிறைச்சாலைகளிலும் பீடி, சிகரட் போன்ற புகைத்தல் பொருட்கள் சட்டபூர்வமாக கைதிகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனாலும் யாழ்ப்பாண சிறை கூடத்தில் மட்டும் ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு மூன்று கட்டு பீடிகளும் மூன்று சிகரட்டும் வரையரையற்ற வகையில் வெற்றிலை பாக்குகளும் ஜெயிலில் இருந்து வழங்குவதற்கு நிர்வாகம் ஏகமனதாக அனுமதி தருகிறது.

சுமார் 350 கைதிகள் இருக்கும் சிறையில் 150 பேர் உறவினர் தினமும் பார்வையிட வருகின்றனர். கைதிகளின் வேண்டுகோளிற்கிணங்க உணவை மறந்தாலும் உறவினர் பீடியை மறக்காது கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே நாளொன்றுக்கு 12 பீடி கொண்ட 450 கட்டு அதாவது 12 x 450 = 5400 பீடிகள் சிறைக்கு அனுமதிக்கப்பட்டு நுகரப்படுகிறது.

நாளொன்றுக்கு நுகரப்பட ஆக்கியமையால் புகைப்பொருட்கள் கட்டுப்பாடு சட்டத்தையும் மீறி சிறையில் இருக்கின்ற சிறுவர்களுக்கும் இந்நடைமுறை விதிவிலக்காக செய்யப்படவில்லை. தினம் ஒரு சில மணித்தியாலம் மட்டுமே கைதிகள் விடுதிக்கு வெளியே திறந்து விடுவதால் மீதி நேரங்களில் பூட்டிய விடுதிகளுள் புகை மண்டலம் நிறைந்து காணப்படுகிறது. இதனால் புகைப்பழக்கம் அற்ற ஏனைய கைதிகள் பாதிக்கப்படுவதை சிறை நிர்வாகம் கண்டுகொள்வதில்லை.

யாழ். சிறைச்சாலையில் இருக்கக்கூடிய சுமார் 85 வீதமான கைதிகள் கஞ்சா போதை பொருட்கள் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டவர்கள் என்பதுடன் சிறைக்குள்ளேயும் கஞ்சா பாவனையும் விற்பனையும் மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




சிறை வளாக சுற்றுச் சூழலுக்குள் பொலித்தீன்களும் குறை பீடித் துண்டுகளும் பரவிக்கிடந்து பௌதீக கேடாக காட்சி தருகின்றன. கைதிகள் தான் இவ்வாறென்றால் கடமையில் இருக்கும் சிறைக் காவலாளிகளுள் அதிகமானோர் புகைப்பிடித்தல் தகாத வார்த்தைகள் தாராளமாக பயன்படுத்தி விழித்தல் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளல் என்று அவர்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிறுவி கொள்கின்றார்கள். இதனால் சிறைக் கைதிகளும் சீருடை தரித்த அரச அலுவலர்கள் எனும் கட்டுக் கோப்பை மதிக்காது அவர்களிட-மிருந்து பரஸ்பர ஒழுங்கீனங்களை பரிமாறிக் கொள்ளும் பாங்கு மேலெலுந்து காணப்படுகின்றது.

இது அத்துமீறும் அல்லது தவறு இழைக்கும் கைதிகளை காவலர்களோ அன்றி அதிகாரிகளோ தட்டிக்கேட்டு தண்டிக்கும் நிலையை இல்லாது செய்துள்ளது.


அத்துடன் வேலிகளே பயிரை மேயும் வேதனை மிகுந்த செயற்பாடாகவும் அமைந்துள்ளது. எவ்வாறாயினும் **நவீன ரக பாதுகாப்பு கட்டமைப்புடன் இருந்தாலும் சட்டவிரோத அபாயகர ஔடதங்கள் சிறைக்குள் வருவதை தேசிய ரீதியில் கட்டுப்படுத்த முடியாத கையாலாகாத் தனத்திலேயே சிறைச்சாலைத் தலைமைப் பீடம் இன்றுவரை இருந்து வருகிறது.**

எவ்வாறாயினும் இவற்றோடு யாழ். சிறைக்குள் கைதிகளின் உடல் உள சுகாதார மேம்பாட்டை அதிகரிக்கக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களோ ஆன்மீக வழிபாடுகளோ அதி வலுமையை வளர்க்கக்கூடிய கருத்துக்களோ ஆற்றுப்படுத்தல்களோ நற்போதனைகளோ அன்றாட உலக நடையை அறிந்து கொள்ளத்தக்க தொலைக்காட்சி வானொலி வசதிகளை ஏற்படுத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். கந்தபுராண கலாச்சார கட்டுக்குள் இன்றும் கொஞ்சமேனும் இருந்து கொண்டு இருப்பதாக கருதப்படும் யாழ் தீபகற்பத்திலும் இவ்வாறான சீரழிவுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப் படுகின்றதா என்ற வலிமையான கேள்வி வலிந்து எழுகிறது.

எனவே, சிறைச்சாலைகள் சீர்திருத்த பள்ளிகளாக மாற்றப்பட விட்டாலும் சமூகத்தை சீரழிக்கும் மையங்களாக மாற்றாது இருப்பது அவசியமாகும் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டியது அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 94




(வி.என்.சந்திரகாந்தி)

# முதுமையிலும் ஆனந்தமாக வாழலாம்

எமது வாழ்க்கை பல பருவங்களை உடையது. பால்யம், இளமை, வாலிபம், முதுமை என்பன குறிப்பிட்டு கூறக்கூடியன. கொடிய நோய்கள், விபத்துக்கள், தற்கொலை, பிரசவம் போன்ற வற்றால் சம்பவிக்கக்கூடிய மரணங்களை தவிர்த்தால் ஏனையோர் முதுமையை தவிர்ப்பதென்பது இயலாது. நடுத்தர வயதை எய்தும் போதே பலரும் முதுமை பற்றி எண்ணி அச்சம் கொள்ள தொடங்கிவிடுவர். முதுமைப் பருவம் பல சவால்களை உடைத்தது என்பது ஏதோ உண்மைதான். ஆனால் அவற்றை எம்மால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் போதும் முதுமையிலும் ஆனந்தமாக வாழ முடியும்.!

இக் கட்டுரையாசிரியரான எனக்கு அண்மையில் ஒரு பயனுள்ள நூல் கைக்கெட்டியது. அதன் தலைப்பு அறுபதிலும் ஆனந்த வாழ்வு என்பதாகும். நான் திடுக்குற்று விட்டேன். ஏனென்றால் எனக்கோ இப்போ எழுபது வயது!. ஆம் முதுமையிலும் ஆனந்தமாக இருக்க வேண்டுமென்றால் நாம் ஆரோக்கியமாகவும் சுறு சுறுப்பாகவும் இருக்க வேண்டும். எமது குடும்பத்தாருடனும் சுற்றத்தாருடனும் நல்ல ஐக்கியத்தையும் மேம்பட்ட உறவையும் பேண வேண்டும். ஒழுக்கமும் நல்ல நடத்தையும் அத்தியாவசியம். மன அமைதி பிரதானம்.

பலர் அறுபது வயதிலும் நல்ல உடல் உள ஆற்றலுடன் இருக்கின்றார்கள். அரச சேவையில் மீள் நியமனம் கருத்துக்கெடுக்கப்படுகின்றது, சில வருடங்கள் முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏராளமாக இருந்தன. அவற்றில் நல்ல அனுபவஸ்தர்களுக்கு பதவியும் அதிகூடிய சம்பளமும் வழங்கினார்கள். ஒரு பக்கம் ஓய்வூதியம், மறுபக்கம் உயர் சம்பளம். காசை விட்டெறிவதனால் உண்டாகும் மகிழ்ச்சி



அனைத்து கவலைகளையும் மறக்கடிக்க வைத்துவிடுமல்லவா? இனி ஆரோக்கியமானதும் அத்தியாவசியமானதுமான உணவு. உடலாரோக்கியத்தை முன்னிட்டதான மேலான அவதானிப்பு. பேரப்பிள்ளைகளுக்கு என்னென்ன வேண்டும் என்று கேட்டறிந்து பெற்றுக்கொடுப்பதில் உள்ள சந்தோஷம். அவை யாவுமே முதுமையின் துன்பங்களை மறக்கடிக்க போதுமானதல்லவா?

இனி வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளுக்கு குழந்தை பிறந்தால் அவர்களை யாராவது கண்ணியத்துடன் பராமரித்தால்தான் கணவன் மனைவி இருவரும் தத்தம் வேலைக்கு போக முடியும். அந்த நோக்கத்திற்காகவே பெற்றோரை தாம் வசிக்கும் நாடுகளுக்கு வரவழைக்கும் பிள்ளைகள் உண்டு. முதுமை என்று வந்துவிட்டாலே பொறுப்புக்கள் அற்று போகும் நிலையில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்வது பெரும் மகிழ்வையே தருமல்லவா!

முதுமையை தாழ்த்தி போடுவதற்கு பணம் அவசியம். எனவே சேமிப்பு என்று கையில் ஏதாவது இருக்க வேண்டும். பிறரை நம்பியிருந்து ஏமாறும் கட்டத்திற்கு ஆளாகக் கூடாது. சேமிப்பு எமது கையில் இருந்தால் போதும் முதுமை நிமித்தமான நோய் நொடி பற்றிய அச்சமின்றி வாழமுடியும். உறவுகளும் சுற்றமும் கூட சொற்கேட்பார்கள்.

அடுத்தபடியாக உடற்பயிற்சி முதுமையை ஒத்திப் போட வல்லது. இயற்கையாகவே முதியவர்களுக்கு வரக்கூடிய இரத்த அழுத்தம், நீரிழிவு, இருதய நோய், குடற்புண், மூட்டுவலி, நாரிப்பிடிப்பு போன்ற நோய்களையெல்லாம் உடற்பயிற்சி மூலம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம். அது போன்று அளவான சத்துள்ள உணவு உடலுக்கு வலுவூட்டும். சரியான வைத்திய ஆலோசனையின் கீழ் தினமும் மருந்து சாப்பிட்டு வருவதன் மூலம் முற்கூறிய வருத்தங்களை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம்.

இப்போதெல்லாம் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் 'ரெட் வைன்' 'பிரண்டி', 'ஜின்', போன்றவற்றை கொண்டு வருவது ஒரு நாகரீகமாக உள்ளது. மது என்றால் என்ன என்று அறியாத தமது பெற்றோருக்கு 'ரெட்வைனை' பாவிக்கும் படி ஆலோசனை வேறு கூறுகின்றார்கள். இரவில் மருந்து போல சிறிதளவு ரெட்வைனை எடுத்தால் உடல் வருத்தங்கள் தோன்றாது என்றும் கூறுகின்றார்கள். அது தொடக்கத்தில் உண்மையாக இருக்கலாம். நாள் போக போக மது வேலை செய்யாது. அளவை கூட்டவேண்டி வரும். அதனால் வைத்தியர் சிபார்சு செய்யும் மருந்து வேலை செய்யாது. உண்மையை சொல்ல வேண்டுமென்றால். வைத்திய ஆலோசனை பெறவேண்டிய நிலையில் உள்ள முதியவர்கள் மது பழக்கத்திலிருந்து விலகியிருப்பதே நன்று.

இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு பொதுவாகவே கோபமும் பதட்டமும் வரும். அதற்கு இடம் கொடுத்தால் நோய் இன்னமும் அதிகரித்து விடும். அதே போன்று நீரிழிவு உள்ளவர்கள் இனிப்பு, மாப்பொருள், கொழுப்பு உள்ளிட்ட உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு என்று பார்த்து வாயை கட்டுப்படுத்த முடிவதில்லை. நீரிழிவு நோய்க்கான மருந்தைத்தான் பயன்படுத்துகின்றோமே அது ஈடுசெய்யும் என்று கூறிக்கொண்டு கேக், ஐஸ்கிறீம், கொக்கோகோலா என்று அருந்தினால் என்ன ஆகும். பலருக்கு நடமாட முடியாத நிலை வருவது அதனால் தான்.

நடமாடிக் கொண்டிருக்கையிலேயே சாகவேண்டும் என்ற விருப்பம் பலருக்கு இருக்கும். அப்படியே நீங்களும் கருதினால் ஒரு சிறிய ஆலோசனை. வீட்டிற்கு வெளியே போவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் உடற்பயிற்சி-களை கூட வீட்டிலேயே வைத்துக் கொள்ளுங்கள். தெருவில் எந்த வாகனமாவது முட்டிமோதி கைகாலை சேதம் பண்ணுவதை தவிர்க்கலாம். அதே போன்று நீங்களும் மகிழுந்து போன்ற சிறிய வாகனம் தவிர்ந்த உந்துருளி, துவிச்சக்கரவண்டி ஆகியவற்றை ஓட்டுவதை கைவிடவேண்டும். இவற்றால் பாரிய அனர்த்தம் உண்டாகும். கைகால்களை உடைத்துக்கொண்டு விட்டால் எந்த உறவுகளும் உங்களை முழுநேரமும் தாங்கமாட்டார்கள்.

அடுத்து, வீட்டில் செல்லப்பிராணிகளை வளர்ப்பது நல்ல மன ஆறுதலை தரும். அவை எப்போதும் நாம் அழைத்தவுடன் அன்புடன் ஓடி வரும். [illegible] பதற்றமற்ற மனநிலை [illegible] இலேசான பொழுதுபோக்குகள், தொலைக்காட்சி, மற்றும் உறவுகளுடன் மனம் திறந்து பழகுதல், பேரப் பிள்ளைகளுடன் செல்லம் கொஞ்சுதல் இவை மகிழ்ச்சியை உண்டுபண்ணி மன அமைதியை தரும்.

தினமும் சிறிது நேர தியானம் உடல்உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும். இறைவழிபாடு போல நன்மை பயப்பது எதுவும் இல்லை.!

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது மரணத்தை எண்ணி ஏன் அஞ்ச வேண்டும். மரணமடைந்த பின்னர் அந்த கவலை தான் ஏது. அப்படி எண்ணி சமாதானம் ஆகலாம்.

நீரிழிவு நோய் இருப்பவர்கள் அதனை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய சிறந்த மருந்துகள் இப்போ தாராளமாக இருக்கின்றன. மேலதிகமாக உணவு உடற்பயிற்சி இரண்டும் அவசியம். நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்குள் வைக்க தவறினால் "குழுக்கோமா" என்ற கண்பார்வை அற்றுப்போகும் நிலை உண்டாகும். முதியோர்களுக்கு பார்வை அவசியம். அதில் பிரச்சனை உண்டானால். அவர்களின் நடமாட்டம் முற்றாக முடங்கிவிடும். இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

முதியவர்கள் கட்டாயமாக அவதானத்துடன் இருக்க வேண்டிய மற்றுமொரு விடயம் உடற்பருமன் ஆகும். உடற்பருமனை கட்டுப்பாட்டுடன் வைத்தாலே பாதி வருத்தம் தவிர்க்கப்படும்.


இளைப்பு, மூட்டு வலி, உடல் நோவு, தளர்வு எல்லாமே எமது அதிகரித்த பருமன் காரணமாகவே உண்டாகின்றன. சாப்பாட்டை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொண்டு தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். குடும்பத்தாருக்கு தெரியாமல் வீதியோர கடைகளில் புளி, உப்பு, காரம் நிறைந்த சொட்டுத்தீனிகளை உண்பதை தவிர்க்க வேண்டும்.

இனி முதுமை பெண்களை வித்தியாசமான வழிகளில் பாதித்து அவர்களுக்கு சிரமத்தை உண்டு பண்ணிவிடுகிறது. வாழ்கை முழுவதும் மாதவிடாய் நிமித்தமாக அனுபவித்த துன்பம் முதுமையில் மாதவிடாய் முற்றும் என்ற பிரச்சனையாக உருவெடுக்கின்றது. ஹார்மோன் உற்பத்தி குறைவு, மனநிலை மாற்றங்களை உண்டுபண்ணுகின்றது. உற்சாகம் இன்மை, திடீர்கோபம், படபடப்பு, மனஎரிச்சல் ஆகிய பாதிப்புகள் உண்டாகின்றன. அவற்றை வெளிநாடுகளில் கிளப் போன்ற பொழுது போக்கு நிலையங்கள் ஈடுசெய்கின்றன. எமது நாடுகளில் பெண்கள் கணவருடன் முரண்படுகின்றனர். இந்த விடயத்தில் விவேகத்துடன் சமாதானமாகி வாழ பழகவேண்டும். மார்பக புற்று நோய் பரிசோதனை பெண்களுக்கு கட்டாயமானது.

எமது இளமை காலத்தில் எமக்கு களிப்பூட்டிய சம்பவங்களை நினைவு கூருவது மகிழ்ச்சி தரும். நாம் ஈட்டிய வெற்றிகள், அடைந்த இலாபங்கள், எமது திறமையை நினைவூட்டும். கடற்கரை, விளையாட்டு மைதானங்கள், சர்க்கஸ் காட்சிகள், கலையரங்குகள் மனதிற்கு களிப்பை தரும். மற்றவர்களுக்கு இயன்ற உதவியை புரிவது மன மகிழ்ச்சியை தரும். அனைவருடனும் தோழமையுடன் வாழ்ந்தால் எமது நீண்ட கால வாழ்கை [illegible] அவசியம் என்பதை அவர்களே [illegible]கள்!

# விநோதங்கள்

## வித்தியாசமான சிந்தனை



அவுஸ்திரேலிய-சிட்னி நகரை சேர்ந்த கர்ப்பிணி மனைவி நிக்கோல் இறந்து - போன தனது கணவரின் நினைவு - கள் எப்போதும் தன்னுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கணவர் தம்முடன் உயிருடன் இருப்பது போன்ற புகைப்படங்களை உருவாக்கியுள்ளார்.

இரண்டாவது குழந்தைக்கு கருவுற்றிருந்த நிக்கோலுக்கு மார்ச் 25 ஆம் திகதி பிரசவ திகதி கூறப்பட்டிருந்தது, ஆனால் துரதிஷ்டவசமாக நிக்கோலின் கணவர் இறந்துவிட்டார். இறந்துபோன கணவருக்கு, தனது மனைவியின் கர்ப்பகாலத்தினை புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது, இந்நிலையில் இந்த ஆசையை நிறைவேற்றும் விதமாகவும், தனது மகன் மற்றும் பிறக்கவிருக்கும் மகள் ஆகிய இருவரும் தங்களது தந்தையை மறக்ககூடாது என்ற நோக்கில் இவ்வாறான படங்களை உருவாக்கியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## திடீரென தோன்றிய நிலப்பரப்பு

டோங்கா தீவுகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளது வவவு (vavau) தீவு. இந்த தீவின் அருகே சில படகோட்டிகள் சென்று கொண்டிருந்தபோது அவர்களது படகில் இருந்து தொலைவில் கடற்பரப்பில் மாற்றங்கள் நிகழ்வதை அவர்களால் காண முடிந்தது.

இதில் வியப்படைந்த அந்த படகோட்டிகள், அந்த பகுதிக்கு தங்கள் படகினை செலுத்தியுள்ளனர், ஆனால் திடீரென கடலுக்கடியில் இருந்து எரிமலை ஒன்று வெடித்துள்ளது. அந்த எரிமலையில் இருந்து வெளியான பாறைத்துகள் அப்பகுதி முழுவதும் கடற்பரப்பின் மீது மிதக்கத்துவங்கியுள்ளது. மேலும் அந்த பாறைத்துகள்கள் உறைந்து நீரால் சூழ்ந்த அந்த பகுதி திடீரென்று நிலப்பரப்பாக உருமாறத் துவங்கியுள்ளதை அந்த மாலுமிகள் பார்த்துள்ளனர்.

நிலப்பரப்பு புதிதாய் உருவாகி 8 மாதங்கள் கடந்து 2000 மைல்கள் தொலைவில் இருக்கும் அவுஸ்திரேலியா கடற்பரப்பில் பாறைத்துகள்கள் கரை ஒதுங்கியதாக கூறப்படுகிறது.




தோன்றிய நிலம்

## அவுடி காரில் வந்திறங்கும் பிச்சைக்காரர்

பிரித்தானியாவை சேர்ந்தவர் மாத்யூ. பல ஆண்டுகளாக தனது வளர்ப்பு நாய் ஹசில்லுடன் வரும் இவர் அங்குள்ள சாலைகளில் பிச்சையெடுப்பதை தொழிலாக கொண்டுள்ளார். இந்நிலையில் பிச்சையெடுத்து விட்டு விலையுயர்ந்த அவுடி காரில் அவர் புறப்பட்டு செல்லும் வீடியோ சமீபத்தில் சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ளது. இதனால் அவருக்கு பிச்சையளித்தவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். மேலும், அவருக்கு உணவு மற்றும் பணம் அளித்துள்ளது பெரும் ஏமாற்றமாக உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## கணிதன்

அடுத்த வார இயத்தில்

நடிகர் : அதர்வா
நடிகை : கேத்ரீன் தெரசா
இயக்குனர் : சந்தோஷ்
இசை : டிரம்ஸ் சிவமணி
ஒளிப்பதிவு : அரவிந்த் கிருஷ்ணா



# திரை விமர்சனம் சேதுபதி

நடிகர் : விஜய் சேதுபதி
நடிகை : ரம்யா நம்பீசன்
இயக்குனர் : அருண் குமார் சு
இசை : நிவாஸ் கே பிரசன்னா
ஒளிப்பதிவு : தினேஷ் கிருஷ்ணன்

நேர்மையான இன்ஸ்பெக்டரான விஜய்சேதுபதி, அசிஸ்டென்ட் கமிஷ்னர் புரமோஷனுக்கான காலகட்டத்தில் இருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஊரில் போலீஸ் ஒருவர் மர்ம ஆசாமிகளால் எரித்து கொலை செய்யப்படுகிறார். அந்த கேஸை விஜய் சேதுபதி துப்புத் துலங்கத் தொடங்குகிறார். தன்னுடைய துப்பறியும் திறனால் எளிதில் குற்றவாளியை நெருங்குகிறார். ஆனால், அதன்பிறகுதான் அவருக்கு சோதனைகளே ஆரம்பமாகத் தொடங்குகின்றன. அது என்ன என்பதே சேதுபதி. இதுவரை நகைச்சுவையான நடிப்பில் ரசிகர்களை கவர்ந்த விஜய் சேதுபதி, முதல் முறையாக மிடுக்கான போலீஸ் அதிகாரி வேடம் ஏற்று ரசிகர்களை கவர்ந்திருக்கிறார். கமர்ஷியல் ஹீரோவுக்கு உண்டான அனைத்து அம்சங்களையும் பெற்றிருக்கிறார். அன்பான கணவனாகவும், பொறுப்பான அப்பாவாகவும் மனதில் பதிகிறார்.

இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாக நடித்திருக்கிறார் நாயகி ரம்யா நம்பீசன். மற்ற கதாநாயகிகள் நடிக்க தயங்கும் கதாபாத்திரத்தை துணிச்சலுடன் ஏற்று யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பீட்சா படத்தில் இடம் பெற்றது போல, விஜய் சேதுபதி-ரம்யா நம்பீசன் இருவரின் கெமிஸ்ட்ரி



இப்படத்திலும் ஒர்க் அவுட் ஆகியிருக்கிறது. விஜய்சேதுபதி-ரம்யா நம்பீசன் தம்பதிக்கு குழந்தைகளாக நடித்திருப்பவர்கள் அபாரமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். வில்லனாக வரும் வேலா ராமமூர்த்தி மென்மையாக மிரட்டியிருக்கிறார். பண்ணையாரும் பத்மினியும் மூலம் ஒரு உணர்வுப்பூர்வமான படத்தைக் கொடுத்த இயக்குனர் அருண்குமார், இப்படத்தின் மூலம் விஜய்சேதுபதியை ஒரு மாஸ் ஹீரோவாக்க முயற்சி செய்திருக்கிறார். நிவாஸ் கே பிரசன்னாவின் இசையில் பாடல்கள் ஓகே ரகம். பின்னணி இசையும் நன்றாக அமைத்திருக்கிறார். தினேஷ்கிருஷ்ணன் ஒளிப்பதிவில் பல காட்சிகள் மிகவும் ரியலாக உள்ளன.

**மொத்தத்தில் சேதுபதி கம்பீரம்**

## த்ரிஷா இல்லைன்னா நயன்தாரா

இந்த டைட்டிலை படித்ததும் என்ன இது என்று ஆர்வமாக பார்க்கும் ரசிகர்களுக்கு ஒரு சந்தோஷ செய்தி. விக்னேஷ் சிவனின் நானும் ரவுடித்தான் பட வெற்றி அனைவரும் அறிந்ததேஇப்படத்தை தொடர்ந்து அவர் எப்போது அடுத்த படம் இயக்குவார் என்பது பலரின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில் அவர் விஜய் சேதுபதி, த்ரிஷா, நயன்தாரா என மூவரின் கூட்டணியில் அடுத்த படம் இயக்க இருப்பதாக கூறப்படுகிறது. அப்படத்திற்கு காத்துவாக்குல இரண்டு காதல் என்ற பெயர் வைத்துள்ளனராம்.பெயரை பார்க்கும் போது இதுவும் ஒரு ரொமாண்டிக் கலந்த காமெடி படமாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## தீபிகா படுகோனே, பிரியங்காவை அடுத்து அபிநயா

இப்போதெல்லாம் நடிகர்கள் ஹாலிவுட் படங்களில் கமிட்டாவது டிரண்ட் ஆகி வருகிறது. அண்மையில் தான் தீபிகா படுகோனே, பிரியங்கா சோப்ரா ஆகியோர் ஹாலிவுட்டில் கால் பதித்துள்ளனர்.அந்த வரிசையில் கோலிவுட் நடிகையான அபிநயா ஹாலிவுட் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.சமுத்திரக்கனி இயக்கிய நாடோடிகள் படத்தில் அறிமுகமான மாற்றுத்திறனாளி நடிகையான அபிநயா, அதன்பின்னர் பல படங்களில் நடித்துள்ளார்.இந்நிலையில் தற்போது One Little Finger என்ற ஹாலிவுட் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டவரும், கின்னஸ் சாதனை படைத்தவருமான ஷரூபம் சர்மா இயக்கும் இப்படத்தில் அபிநயாவுக்கு பவர்புல்லான கேரக்டர் என்று கூறப்படுகிறது.

## நான் எதையும் தேடி போகவில்லை ஸ்ருதி மனம் திறக்கிறார்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள் விஜய், அஜித், சூர்யா ஆகியோருக்கு ஜோடியாக நடித்து விட்டார் ஸ்ருதிஹாசன். இதை தொடர்ந்து மீண்டும் சூர்யாவுடன் S3 படத்தில் நடித்து வருகிறார்.இதுவரை ஸ்ருதி நடித்த அனைத்து படங்களிலும் ஏதாவது ஒரு பாடலாவது பாடி விடுவார். ஆனால், S3 படத்தில் எந்த ஒரு பாடலும் இவர் பாடவில்லையாம். இதுக்குறித்து இவரிடம் கேட்கையில் நானாக எந்த படத்திலும் பாடுகிறேன் என்று கேட்டதில்லை, இயக்குனர்கள் அல்லது இசையமைப்பாளர்கள் விரும்பினால் மட்டுமே பாடுவேன் என கூறியுள்ளார்.

## ஆஸ்கர் மேடையை அலங்கரித்த இரண்டாவது தமிழர்

'ஏ.ஆர். ரகுமான் ஆஸ்கர் விருதினை பெற்றதற்கு ஒட்டுமொத்த தமிழகமே சந்தோஷப்பட்டனர். தற்போது அதே ஆஸ்கர் மேடையில் மற்றொரு தமிழர் ஒருவர் விருது வாங்கியுள்ளார்.ஸ்பைடர் மேன், மேன் இன் பிளாக், ஹொட்டல் டிராஸ்லிவானியா, தி ஸ்மர்.்.ப்ஸ், கிளோடி வித் த சான்ஸ், ஆ.்.ப் மீட் பால்ஸ், ஒபன் சீசன் மற்றும் ஸ்டுவர்ட் லிட்டில் போன்ற ஹாலிவுட் படங்களில் பணியாற்றியவர் கொட்டலாங் கோலியோன்.கோயம்புத்தூரை சேர்ந்த இவர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனைகள் பிரிவில் விருது வென்றுள்ளார். அதோடு ஆஸ்கர் மேடையில் அனைவருக்கும் நன்றி என்று தமிழில் கூறியுள்ளார்.

## கெஸ்ட் ரோல்னா கூட பரவாயில்ல, விஜய் கூட நடிக்கனும்

ரஜினி, அமிதாப் பச்சன் உள்ளிட்ட மெகா ஸ்டார் வைத்து முத்திரை படங்களை தந்தவர் புரட்சி இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகர். நாளைய தீர்ப்பு படத்தின் மூலம் தன் மகன் விஜய்யையும் ஹீரோவாக அறிமுகப்படுத்தினார். சில வருடங்களாக சினிமாவில் இருந்து ஒதுங்கியிருந்த இவர் டூரிங் டாக்கீஸ் என்று படத்தை இயக்கி நடித்தார். அதைதொடர்ந்து அறிமுக இயக்குனர் விஜய்கிரண் என்ற இயக்கிய நையப்புடை படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் தான் இனி படம் இயக்க மாட்டேன் என்று அறிவித்துள்ளார். தொடர்ந்து படங்களில் நடிக்க விரும்புவதாகவும் கூறியுள்ளார். அந்த வகையில் தன்னுடைய மகன் விஜய் படத்திலும் நடிக்க வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

OTHER




## iPhone SE ஸ்மார்ட்கைப்பேசி பற்றிய புதிய தகவல்!

iPhone SE ஸ்மார்ட்கைப்பேசி எப்படியிருக்கும், அதில் உள்ள சிறப்பம்சங்கள் என்ன என்பது குறித்து பல்வேறு தகவல்கள் வெளிவந்து வாடிக்கையாளர்களின் மத்தியில் அமோக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் சில்லறை விற்பனை குறித்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஸ்மார்ட்கைப்பேசி வரிசையில் எப்போதும் முன்னணி நிறுவனமாக இருக்கும் அப்பிள் நிறுவனத்தின் அடுத்த படைப்பு தான் iPhone SE ஸ்மார்ட்கைப்பேசி. 4 இன்ச் தொடுதிரை, A9 ப்ராசசர், 2GB RAM மற்றும் இரண்டு சேமிப்பு வசதியாக, 16GB, 64GB உள்ளது. மேலும், மார்ச் மாதம் 21 ஆம் திகதி இந்த கைப்பேசியோடு சேர்த்து 9.7 இன்ச் தொடுதிரை கொண்டு Ipad pro டேப்லட்டும் வெளியாகும் என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்கிடையில், iPhone SE ஸ்மார்ட்கைப்பேசியின் சில்லறை விற்பனையின் விலை 400 டொலர் அல்லது 500 டொலர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஜெட் விமானத்தை உருவாக்கும் முயற்சியில் நாசா

அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்பட்டுவரும் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அதி நவீன பயணிகள் ஜெட் ஒன்றினை தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. 2020ம் ஆண்டில் பயன்பாட்டிற்கு விடப்படவுள்ள இந்த ஜெட் விமானமானது ஒலியை விடவும் 4.5 மடங்கு வேகம் உடையதாக இருப்பதுடன், தீங்கு விளைவிக்கும் இரைச்சலை முற்றாக நீக்கும் தொழில்நுட்பத்தினை உள்ளடக்கி இந்த விமானம் தயாரிக்கப்படவுள்ளது. அதாவது மணிக்கு 1,234 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடி இந்த விமானத்தின் மூலம் லண்டனிலிருந்து நியூயோர்க்கிற்கு 3.5 மணி நேரத்தில் சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



NASA




## சைக்கிள் சலவை இயந்திரம்

துணி துவைக்க உதவும் சைக்கிள் சலவை இயந்திரம் ஒன்றை சீனாவை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். சைக்கிள் ஓட்டுவது என்பது உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாக கருதப்படுகிறது, உடலின் இரத்த ஓட்டங்கள் சீரான முறையில் நடப்பதற்கு சைக்கிள் உடற்பயிற்சியினை அன்றாடம் மேற்கொள்வது நல்லது. இந்நிலையில், சீனாவின் Dalian தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் வடிமைத்துள்ள சலவை இயந்திரம் சைக்கிள் வடிவில் உள்ளது. இதில், சைக்கிளின் அடிப்புறத்தின் அடைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் அழுக்கு துணிகளை அடைத்துவைத்துக்கொண்டு, சைக்கிளின் பெடலை வேகமாக அழுத்தும்போது, உள்ளே உள்ள துணிகள் சுழலுகையில் அதில் உள்ள அழுக்கு நீங்கும். இது உடலுக்கு ஒரு வித உடற்பற்சி மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் மின்சாரத்தினை சேமிப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

## விபத்துக்குள்ளானது கூகுளின் தானியங்கி கார்

சாரதி இன்றி தாமாகவே சாலைகளில் பயணம் செய்யக்கூடிய கார்களை கூகுள் உட்பட மேலும் சில நிறுவனங்கள் வடிவமைத்துவருகின்றமை தெரிந்ததே. இவற்றுள் கூகுள் நிறுவனம் வடிவமைப்பு பணிகளை பூர்த்தி செய்து தற்போது பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. ஆரம்ப கட்ட பரிசோதனைகள் வெற்றியளித்துள்ள போதிலும் 12 தடைவைகளுக்கு மேல் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந் நிலையில் தற்போது குறித்த கார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. கடந்த மாதம் காதலர் தினத்தன்று இடம்பெற்ற இவ் விபத்தின்போது காரானது மணிக்கு 2 மைல் வேகத்திலும், பஸ் ஆனது மணிக்கு 15 மைல் வேகத்திலும் தடம்புரண்டுள்ளது. எனினும் இதன்போது எவரும் காயமடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ட்ரோன் விமானம்!

கடந்த ஆண்டு ஆளில்லா விமானமான ட்ரோன் என்ற சிறிய ரக விமானம் அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்த தூரம் வரை மட்டுமே பயணிக்கும் இந்த விமானம் சில முக்கிய நிகழ்வுளை கண்காணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. இந்நிலையில் இந்த விமானத்திற்கு கண்டிப்பான முறையில் விமானியை பணியமர்த்த வேண்டியது அவசியம் என அமெரிக்காவின் மத்திய போக்குவரத்துதுறை தெரிவித்துள்ளது. ஏனெனில், விமான நிலையங்களுக்கு அருகில் இந்த விமானம் பறக்கையில் மக்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது என்று கூறியுள்ளது. இதுகுறித்து மேலும் கூறியுள்ளதாவது, இந்த விமானம் குறித்து தற்போது வரை 100 அறிக்கைகளையும் பெற்றுள்ளோம். மேலும், கடந்த மாதம் அட்லாண்டிக் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்த ட்ரோன் ரக விமானத்தின் அதிர்வலைகளை சோதனையிட்டதில், விமானியின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த விமானம் பறந்தால், இடையூறு ஏற்படும் என தெரியவந்துள்ளது.

ட்ரோன் விமானத்தின் அணுகுமுறைகள் மற்றும் ரேடியோ அதிர்வலைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்பது குறித்த சோதனை நடைபெற்று வருகிறது, ஆகஸ்ட் மாதத்துக்குள் இதுதொடர்பான முழு அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளது.





## சம்சுங் அறிமுகம் செய்யும் புத்தம் புதிய வளை திரைகொண்ட தொலைக்காட்சிகள்

உலகப் புகழ் பெற்ற இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான சம்சுங் ஆனது வளை திரைகொண்ட தொலைக்காட்சிகளை அறிமுகம் செய்யவுள்ளது. இவற்றில் 27 அங்குல அளவுடைய Samsung CF591, 23.5 அங்குல அளவுடைய, மற்றும் 27 அங்குல அளவுடைய CF390 எனும் தொலைக்காட்சிகளை அறிமுகம் செய்யவுள்ளது.

சம காலத்தில் மக்கள் மத்தியில் வளைதிரைகொண்ட LED தொலைக்காட்சிகளுக்கு அதிக கேள்வி இருப்பதை கொண்டு இந்த மூன்று வகையான தொலைக்காட்சிகளையும் இம்மாதம் அமெரிக்காவில் அறிமுகம் செய்யவுள்ளதுடன், எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணமானவனின் மனது

*கடந்தவாரத் தொடர்ச்சி.. ..*

வாழ்வு தரும் சமிக்ஞைகளை அவதானிப்பதும், அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியம் என்பதும் இன்று புரிந்திருக்கிறது. அன்று அது புரியவில்லை. ஏன் என்பதற்கான பதிலை தேடிக்கொண்டிருக்கிறேன். காலப்போக்கில் எதைப் பேசினாலும், எப்படி பேசினாலும் வார்த்தை யுத்தம் ஏற்படலாம் என்னும் நிலை வரலாம் என்றபோது பேசாது இருப்போம், என்ற சுடலை ஞானம் வரும். ஆனாலும் அதுவும் சற்று நேரம்தான். மீண்டும் வேதாளம் முருங்கையில் ஏறிப் பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும்.

ஒன்றாய் இருந்த படுக்கை வெவ்வெறு அறைகளுக்கு மாற்றப்பட்டு, உனது, எனது என்று பாகம் பிரிக்கப்பட்டு, தனித்தனிச் சமையல் என்று ஆகியிருந்த காலமும் இருந்தது.

தொலைபேசியில் மற்றயவரைக் குறை சொல்லியே மகிழ்ந்த காலங்களும், எனது தவறுகள் மிகக் குறைவு என்று நியாயம் கற்பித்த நாட்களும், அடங்காப்பிடாரி என்று மற்றையவர் முன்னிலையிலேயே ஊருக்கு அறிவித்த நாட்களிலும் எனது தவறுகளை நான் உணர்ந்து கொள்ளவில்லை. எந்த நேரத்திலும் மற்றவருடைய மனநிலையை நான் புரிந்து கொண்டு அதிகம் விட்டுக்கொடுத்துப் போகாத மனநிலை சிறிது சிறிதாகவே எனக்குள் புகுந்து இறுதியில் அவையே வாழ்க்கையாகியது.

பேச்சற்று, குறுஞ்செய்தியில் மட்டுமே பேசிக்கொண்டேன். மற்றையவர் வாய் திறந்த நேரங்களில் காட்டுக் கத்து கத்தினேன். மற்றையவருடன் உரையாடுவதே அசிங்கமானது என்ற மனநிலையும் வாய்த்திருந்தது. இன்றும் அப்படியே! கண்ணில் எரிக்கும் வெறுப்பை உமிழ்ந்துகொண்டு திரிந்தேன். எங்கெல்லாம் மற்றையவரை அவமானப்படுத்தி, சிறுமைப்படுத்த முடியுமோ அங்கெல்லாம் அதை மிகச் சிறப்பாக செய்து குரூரத்தின் ருசியை பருகிக்கொண்டேன்.

யார் உதவி கேட்டாலும் உடனே போய்ச் செய்வதே எனது வழக்கம். ஆனால் வீட்டிலோ என்னுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட மற்றையவர் ஏதும் உதவிகேட்ட நேரங்களில் "இவ்வளவு செய்யும் உனக்கு இதைச் செய்யத்தெரியாதா" என்று இகழ்ச்சியுடன் குரூரம் காட்டியிருக்கிறேன். மற்றையவரின் அமைதியைக் குலைப்பதில் முனைப்பையயும் மகிழ்ச்சியையும் கண்டிருக்கிறேன். மற்றையவரைக் காணும் நேரமெல்லாம் புறுபுறுத்தபடியோ, திட்டியபடியோ அல்லது பற்களை நெருமி கண்களில் நெருப்பினைக் குழைத்துக் காண்பித்தபடியே கடந்து போயிருக்கிறேன். சாதாரண மனிதனுக்கு கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச அன்பை, அக்கறையை, கவனத்தை நான் ஒருபோதும் அவருக்குக் கொடுக்க விரும்பவில்லை. மாறாகக் கேலியும் அசிங்கமும் படுத்தினேன். இவையெல்லாம் பிரச்சனைகள் தொடங்கி சில ஆண்டுகளுக்குள் என! மற்றையவர் துன்பப்படும்போது, வேதனைப்படும்போது, கண்ணீர் சிந்தும்போது எனது கர்வம் மேலோங்கி, குரூரமாய் மகிழ்ந்திருந்திருந்தேன். குழந்தைகளுடனான நேரங்களைத் தவிர்த்து ஏனைய நேரங்களில், வேலையே கதி என்று இருந்திருக்கிறேன். வீடுசென்றால் பிரச்சனைகள் வரும் என்பதால் வாகனத்தில் உறங்கிக் கிடந்த நாட்களும் உண்டு.

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## மணவிலக்கானவனின் சாட்சியம்

நாடுவிட்டு நாடுவந்த குடும்ப நீதிமன்றங்கள், நண்பர்களின் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும், கறுவிக்கொட்டியபடியே வரட்டுக் கௌரவம் பேசி, முன்வைக்கப்படும் தீர்வினை ஏனோதானோ என்று முழு மனதுடனான சமாதான பிரக்ஞை இன்றி, செயற்படுத்திய நாட்கள், ஒரு குடும்ப நிறுவனத்தின் இறுதிக் காலம் என்றதையும் நான் புரிந்துகொள்ளவில்லை.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்க எது காரணியாய் இருக்கிறது? ஆதிக்கத்தன்மையா? அன்பின்மையா? மற்றைவர் மீதான மரியாதையை மதிக்காமையா? யதார்த்தத்தை உணராத் தன்மையா? எனக்கேதோ இவையனைத்துமே மனப்பிறள்வுகளுக்குக் காரணம் என்று படுகிறது..


காதலின் பின்பு, திருமணத்தின் பின்னான ஆரம்ப நாட்கள் கடந்து முடிந்த பின்புதான் வாழ்க்கையே ஆரம்பிக்கிறது. ஆரம்ப கால வாழ்க்கையானது ஒரு கற்பனை விளம்பரம் போன்றது. எல்லாமே மகிழ்ச்சியாயும், சிறப்பானதாயும் இருக்கும். எதையும் விட்டுக் கொடுப்போம். இசைந்துபோவோம். கலந்தும் போவோம். கற்பனையில் பினாத்தும் காலமும் இதுவே

ஆனால் அதன் பின்னான காலம்தான் வாழக்கையின் பிற்காலங்களை முடிவு செய்கிறது என்று நான் புரிந்துகொண்டபோது திருமணமாகி இருபது வருடங்களாயும், விவாவகரத்-தாகி நான்கு வருடங்களாகியும் இருந்தது.

ஆரம்பகாலங்களில் ஒருவர் மீதான ஈர்ப்பு அதிகமாய் இருக்கும். அவருடனேயே இருக்கவேண்டும், பேசவேண்டும் என்று நிலை சற்று சற்றாக மாறத்தொடங்குவது இயற்கையே. இந்த யதார்த்தத்தை பலரும் புரிந்துகொள்வதில்லை. மற்றையவர் மீதான சுதந்திரத்தை மதித்து, அதே போல் எனது சுதந்திரமும் மதிக்கப்படும்போதுதான் வாழ்க்கை மீதான பலமானதொரு அத்திவாரத்தை கட்டியெழுப்ப முடிகிறது.

எனது தவறுகளில் முக்கியமானது நான் மற்றையவரின் சுயம், தன்மை, எதிர்பார்ப்பு, குணம் ஆகியவற்றில் கவனம் செலுத்தாமையே என்பது எனது கணிப்பு. எனது சுயம், தன்மை, விருப்பு வெறுப்புக்களை நான் முன்னிறுத்திய போது என்னையறியாமலே ஒருவித ஆதிக்கத்தன்மை உருவாகும் சந்தர்ப்பம் இருக்கிறதல்லவா? இப்படியான சந்தர்ப்பங்கள் இரு பகுதியினருக்கும் பொருந்தக்கூடியவை.

சேர்ந்து வாழும் ஆரம்பகாலங்களின் கவர்ச்சி வடியும்போது ஒருவர் மீதான கவர்ச்சியும், ஈர்ப்பும் குறையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. அது இயற்கையே. இக்காலத்தில் மற்றையவர் மீதான மரியாதையை நாம் வளர்த்துக்கொள்வது அவசியம். நான் தலைகீழாக விழுந்து அடிபட்ட இடமும் இதுவே.




## காதலனுடன் சேர்ந்து கணவனை கொல்லும் முயற்சி....

*மீகமவில் நிகழ்த்தப்பட்ட கொலை முயற்சி (ரிவிர 28.01.2016)*

*கடந்தவாரத் தொடர்ச்சி.. ..*

அன்று லூஜின் வெளியில் செல்ல தயாராகியதும் லசன்தி அவரிடம் எங்கே செல்கிறீர்கள் என வினவ, தமது தோட்டத்தை விற்பதற்காக முற்பணம் வாங்க நயோமி உணவகத்திற்கு செல்வதாக கூறினார் லூஜின். லூஜின் செல்வதை மாடியில் நின்று பார்த்த வண்ணம் இது தான் உங்கள் இறுதிப்பயணம் என எண்ணிக் கொண்டே சமனிற்கு தொலைபேசி அழைப்பினூடாக தனது கணவன் வெளியில் செல்கிறார் எனும் விடயத்தை கூறினாள்.

பிரதான வீதிக்கு வந்து சற்று நேரத்தில் லூஜினை ஒரு மோட்டார்சைக்கிள் பின் தொடர்ந்தது. அதில் வந்தவர்கள் சமனும் டனுஷ்கவும். அவர்களது கையில் வெடிகுண்டு ஒன்று காணப்பட்டது. அது ரவியால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வெடி குண்டு அதன் கிளிப்பை அகற்றி 4 நிமிடத்தில் வெடிக்கக் கூடியது. அதேவேளை ரவி காரில் சமனும், டனுஷ்கவும் சரியாக செய்கிறார்களா என அறியும் நோக்கில் இவர்கள் சென்று கொண்டிருந்த திசைக்கு எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தான்.

இன்னும் சற்று தூரத்தில் வலது கை பக்கமாக திரும்பினாள் கட்டுநாயக்கா வீதி எனவே இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணி சமன் கிளிப்பைக் கழற்றி முன்னால் சென்று கொண்டிருந்த லூஜின் மீது வீசினான். வீசியவுடன் மோட்டார்சைக்கிள் லூஜினை தாண்டி கட்டுநாயக்கா வீதிக்குள் பறந்தது. அப்போது சமனிற்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

எறிந்த வெடி குண்டு லூஜினின் தோல்பட்டையில் பட்டு கீழே விழுந்து உருண்டு சென்று வெடித்தது. மறு பக்கமாக வந்து கொண்டிருந்த பெறுமதியான கார் முற்றாக சேதமானது. ஆனால் லூஜினுக்கோ தோல்பட்டையிலும், காலிலும் சிறு சிறு காயங்களே ஏற்பட்டிருந்தன.

சம்பவத்தின் பின் அவ்வழியால் வந்த லூஜினின் நண்பர் அடிபட்டுக்கிடந்த லூஜினை தனது முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் லசன்தியையும், அவர்களது மகளையும் ஏற்றிக் கொண்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் லூஜினை அனுமதித்தார்.

இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் நூறிற்கும் அதிகமானோரிடம் வாக்குமூலம் எடுத்தனர். எனினும் ஆரம்பத்தில் அக்காரில் ஏற்பட்ட கோளாறு என எண்ணியிருந்தனர் அனைவரும். இருப்பினும் சம்பவ இடத்தை ஆராய்ந்து பார்த்த போதே வெடி குண்டொன்றின் சிறிய துண்டு கண்டெடுக்கப்பட்டது. அதன் பின்பு விசாரணைகள் துரித கதியில் முடுக்கி விடப்பட்டன.

நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை காவல்துறையினர் 3 குழுக்களாக பிரிந்து விசாரணையை மேற்கொண்டனர்.

இதற்கிடையில் லூஜின் சமனிற்கு அழைப்பு விடுத்து தனக்கு விபத்து நேர்ந்ததாகவும் தன்னால் வரமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார். அச்சமயத்தில் லூஜினை விசாரிக்க வந்த காவல்துறையினர் அவ்விடம் அந்நேரத்தில் வந்தமைக்கான காரணத்தை வினவ லூஜின் தெளிவாக காரணத்தை கூறினார். அவரது தொலைபேசியில் இருந்த அந்த எண் குறித்து விசாரித்த அவர்கள் அத்தொலைபேசி எண் கட்டுகுறுந்த மதுஷங்க என்பவரது பெயரில் பதிவாகியிருந்தது. அவரிடம் விசாரித்த போது அதை தான் களுத்துறை சந்தரூபன் எனும் எனும் தனது மாமாவின் பிள்ளைக்கு வழங்கியதாக தெரிவித்தார். இது குறித்து சந்தரூபனிடம் விசாரித்த போது தனது நண்பன் ரவி இத்தாலியில் இருந்து வந்திருப்பதாகவும் அவரது பாவனைக்காக வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இதை தொடர்ந்து ரவி எனும் நபருக்கும் சமனிற்கும் லூஜினிற்கும் இடையிலான தொடர்பை அறியும் நோக்கில் காவல்துறையினரின் அடுத்த கட்ட விசாரணை அமைந்திருந்தது. இதற்கெல்லாம் சமன் என்பவனை அணுகினால்தான் விடை கிட்டும் என்பதை ஊகித்தனர் விசாரணைக் குழுவினர்.

ரவியோ சம்பவம் நடந்த மறுநாளே இத்தாலிக்கு பயணமாகியிருந்தார்.

ரவி யார் என தேடல் தொடங்கிய அதே சமயத்தில் சமனது வீடு சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. ஜனவரி 13 சமன் வீட்டிற்கு வந்த போது காவல்துறையிடம் அகப்பட்டுக் கொண்டான். தான் வசமாக மாட்டிக் கொண்டதை உணர்ந்த சமன் காவல்துறையிடம் அனைத்தையும் தெரிவித்து விட்டால் தப்பிக் கொள்ளலாம் என எண்ணிக் கொண்டான்.

அதேசமயம் வேறு வழிகளிலும் தேடல்கள் இடம்பெற்றன. எனினும் லூஜின் பக்கமாகவே அனைத்து விசாரணைகளும் திரும்பியிருந்தன.

சமனை கைது செய்த காவல்துறை அவனை விசாரித்த போது அவன் ஒன்று விடாமல் அனைத்தையும் தெரிவித்தான். அத்துடன் டனுஷ்கவைப் பற்றியும் தொரிவித்தான். அவனுக்கு இடங்களும் உள்வீதிகளும் நன்றாக தெரிந்திருந்தமையால் அவனையும் இத்திட்டத்திற்குள் உள்வாங்கியதாக தெரிவித்தான்.

மேலும் லூஜினைக் கொலை செய்தால் 2 இலட்சம் ரூபா பணமும், பிலியந்தலையில் வீடும், டுபாயில் வேலையும் எடுத்துத் தருவதாக ரவி கூறியிருந்ததாகவும் கூறினான். அத்துடன் லூஜினின் மனைவியான லசன்தியும் தம்முடன் இணைந்து இக்கொலை முயற்சிக்கு உதவி புரிந்ததாகவும், அவரே லூஜின் வெளியில் வந்த நேரத்தை எமக்கு தெரியப்படுத்தினார் எனவும் சமன் காவல்துறையிடம் ஒப்புவித்தான்.

தொடர்ந்து காவல்துறை டனுஷ்கவையும் கைது செய்தனர். டனுஷ்கவையும் விசாரணை செய்து பல தகவல்களை பெற்றுக் கொண்டனர்.


பின்னரே ரவிக்கும் லசன்திக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பு குறித்தும் அதனால் தான் ரவி இவ்வாறானதொரு ஏற்பாடு செய்திருந்தமையும் கண்டறியப்பட்டது. அத்துடன் அவர்கள் மூவரும் இக்கெலைச் சம்பவத்திற்காக பாவித்த ஒரு மோட்டார் சைக்கிளும் ஒரு காரும் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு கையகப்படுத்தப்பட்டது.

அடுத்ததாக தனது கணவனையே கொலை செய்வதற்கு நடைபெற்ற திட்டத்திற்கு உடந்தையாக இருந்த மனைவி லசன்தியை காவல்துறையினர் ஜனவரி 16ஆம் திகதி கைது செய்தனர்.

இவ்வழக்கு நீதிமன்று எடுத்துச் செல்லப்பட்ட போது சமனையும் டனுஷ்கவையும் ஜனவரி மாதம் 29ம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது அத்துடன் லசன்தியை ஜனவரி 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி பணித்தார்.





முற்றும்...

மொழியாக்கம் : தன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் யாப்பும் சிங்கள தலைவர்களும்

சண்முகநாதன் பார்த்தீபன்
www.ibctamil.com

**ஒற்றையாட்சியின் கீழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு என்ற கொள்கையை அரசாங்கம் மாத்திரமல்ல எதிர்கட்சிகளும் ஆதரித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழ் மக்களின் கருத்துகள் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது.**

"முதன் முறையாக மக்களின் கருத்துக்களை உள்ளடக்கிய அரசியல் யாப்பை உருவாக்க உள்ளோம்" என்ற மகுட வாசகத்துடன் நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பித்த புதிய அரசியல் யாப்புக்கான உத்தேச நகல் யோசனை உருவாக்கத்திற்கான மக்கள் கருத்தறியும் செயற்றிட்டம் கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்துள்ளது.

## மக்கள் கருத்தறிதல்

புதிய யாப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் அமர்வுகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டதோடு, பொது மக்கள், சமூக சேவை அமைப்புகள், மகளிர் அமைப்புகள் உள்ளிட்ட பலரும் தங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். புதிய யாப்பு உருவாக்கத்தில் சிங்கள மொழி பேசும் மக்களைவிட தமிழ் பேசும் மக்கள் காட்டும் அக்கறை மற்றும் ஆர்வம் அதிகமாகவே காணப்படுகின்றது.

காரணம், 1948ஆம் ஆண்டு பிரித்தானியரது காலனித்துவத்தி



லிருந்து இலங்கை விடுபட்டதன் பின்னர் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை பறித்து, அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையை படிப்படியாக நிறைவேற்ற ஆரம்பித்தார்கள் சிங்கள அரசியல் தலைவர்கள். குறிப்பாக பெரும்பான்மையாக இருந்த சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை அடக்கியாளக்கூடிய வாய்ப்பை பிரித்தானியா உருவாக்கிய யாப்பு வழங்கியிருந்தது.

## சோல்பரி யாப்பு

குறிப்பாக 1948 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சோல்பரி அரசியல் யாப்பின் 20 ஆவது சரத்தில் உள்ள சிறுபான்மையோர் காப்பீடு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த சரத்தை அப்போதிருந்த அரசியல் தலைவர்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. இந்த யாப்பை உருவாக்கிய சோல்பரி பிரபு 29 ஆவது சரம் நீக்கப்பட்டமை தொடர்பில் தனது நூலில் கவலை வெளியிட்டிருந்தார். 1948 - 1949 பிரஜாவுரிமைச் சட்டத்தை உருவாக்கிய அரசாங்கம் ஏற்கனவே அடிமைப் பட்டுக்கிடந்த இந்திய வம்சாவளித் தமிழர்களை நாடற்றவர்களாக மாற்றியது.

எனினும் அப்போதைய சூழ்நிலையில் அரசியல் ரீதியாக பாரிய தாக்கத்தை இந்த சட்டம் ஏற்படுத்த-வில்லை. என்றாலும், அம் மக்களுக்கு கிடைத்திருந்த வாக்குரிமை சுதந்திர இலங்கையை ஆண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் உருவாகியிருந்த இலங்கை இந்திய காங்கிரஸ்"க்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் (இந்திய வம்சாவளி தமிழ் மக்கள்) மத்தியில் பெருமளவு ஆதரவு காணப்பட்டதோடு, அவர்களது வாக்குரிமை கண்டிச் சிங்களவர்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைக்கலாம் என்ற அச்சமே பிரஜாவுரிமைச் சட்டத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது.

## ஜே.ஆரின் செயற்பாடுகள்

இது ஒருபுறம் இருக்க 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இனப் பிரச்சினைக்கான கால்கோளாக அமைந்தது 1943 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன தனிச்சிங்கள சட்டம் தொடர்பிலான பிரேரணையை முன்வைத்தார். இந்த நிலையில் 1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாநாயக்க அந்த முன்மொழியை சட்டமாக்கி நடைமுறைப்படுத்தினார்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் அடாவடித்தனங்களும் ஆரம்பமாகிய தோடு, பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிரான ஜே.ஆர். ஜெயவர்தனவின் பாத யாத்திரை, 1972 மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் உருவான புதிய யாப்புகளில் காணப்பட்ட மொழிக் கொள்கைகள் மற்றும் இதர தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகள் வடக்கு கிழக்கு மக்களை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டியது என்றால் அது மிகையல்ல.

## ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பம்

"சிங்களவர்கள் தமிழர்களை அடக்கியாள முற்பட்டதன் விளைவாகவே ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது" என்ற "துக்கலக்" சஞ்சிகை ஆசிரியர் சோவின் கருத்தை அர்த்தப்படுத்தும் வகையிலேயே இலங்கையை ஆண்ட, ஆளும் அரசாங்கங்களினதும் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. இந்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இலங்கையில் பாரிய மாற்றம் அல்லது புரட்சி ஏற்பட்டுள்ளதாக சர்வதேசமே நற்சான்றிதழ் கொடுத்ததுள்ள நிலையில் அந்த போதை தணிவதற்குள் புதிய யாப்பு ஒன்றை உருவாக்கும் முதற்கட்ட பணியை நிறைவு செய்திருக்கிறது இலங்கை அரசாங்கம்.

> **ஒற்றையாட்சியின் கீழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு என்ற கொள்கையை அரசாங்கம் மாத்திரமல்ல எதிர்கட்சிகளும் ஆதரித்து வருகின்றன. இந்த நிலையில் பொதுமக்களின் கருத்தறியும் செயற்திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தமிழ் மக்களின் கருத்துகள் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது.**

புதிய யாப்பு தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வுகளை உள்ளடக்கும் வகையிலேயே உருவாக்கப்படும் என வாய்மொழி உறுதிகளை அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்கள் முன்வைத்து வருகின்ற நிலையில் அதற்கேற்ப புதிய யாப்பு உருவாக்கம் தொடர்பிலான தமிழ் மக்களின் கருத்துக்களும் அமைந்துள்ளன. குறிப்பாக வடபகுதியில் நடைபெற்ற அமர்வுகளில் இனவாதத்தை தோற்றுவிக்கும் அமைப்புகளை தடை செய்ய வேண்டும், சமஷ்டி முறையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், தமிழ் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளிட்ட தமிழ் மக்கள் சார்பில் பல யோசகைள் முன்வைக்கப்பட்டன.

## தமிழர்களின் இழப்புகள்

இதில் ஒருபடி மேலே போய் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அமர்வில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் பொது மக்கள் முன்வைத்துள்ளனர். 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியை பாதித்தது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டாலும் தமிழ் மக்களின் இழப்புகளை எவராலும் ஈடுசெய்ய முடியாது என்பது நிதர்சனம்.

புதிய யாப்பு உருவாக்கப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ள அரசாங்கம், மக்கள் கருத்தறியும்



செயற்றிட்டத்தையும் மிகவேகமான நிறைவு செய்துள்ளது. நாடாளுமன்றத்தை அரசியல் அமைப்பு பேரவையாக மாற்றுவதற்கான பிரேரணையை பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்ததோடு வெகு விரைவில் அது தொடர்பிலான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் நடைபெற-வுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கப் போவதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்ற சூழலில் இனப்பிரச்சினை தீர்வி-ற்கான அடிப்படையாக அதிகாரப் பரவலாக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் முன்வைத்திருக்கும் நிலையில் அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

## எதிர்க்கட்சிகளும் ஏற்பு

ஒற்றையாட்சியின் கீழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு என்ற கொள்கையை அரசாங்கம் மாத்திரமல்ல எதிர்கட்சிகளும் ஆதரித்து வருகின்றன. இந்த நிலையில் உத்தேச அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலான பொதுமக்களின் கருத்தறியும் செயற்திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தமிழ் மக்களின் கருத்துகள் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

1972 மற்றும் 1978 ஆண்டு யாப்புகளில் பொதுமக்களின் கருத்துகள் கருத்திற்கொள்ளப் படவில்லை இருந்தாலும் அந்த யாப்புகள் சிங்கள பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்தும் வகையில் அமைந்திருந்ததோடு, தமிழ் மக்களை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை சிறப்பாக நிறைவேற்றியுமிருந்தது.

## மக்களின் எதிர்ப்பார்ப்பு

மேலே குறிப்பிட்டதுபோல, உருவாக்கப்படவுள்ள புதிய யாப்பு குறித்த எதிர்பார்ப்பு சிங்கள மக்களை விட தமிழ் பேசும் மக்கள் மத்தியிலேயே மேலோங்கி இருக்கின்றது. காரணம் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விடிவையும் விடுதலையும் பெற்றுக்கொடுப்பதற்கான ஒரே வழி யாப்பினூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே என்பது அவர்களது எதிர்பார்ப்பு. எனினும் அதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு ஒரு கோப்பை தேனீரையேனும் இலவசமாக வழங்குவதற்கு பேரினவாத கட்சிகள் விரும்பாத நிலையில் அவர்கள் இணைந்து உருவாக்கும் அரசியல் யாப்பில் எவ்வாறு அதிகாரங்களை வழங்கப்போகிறார்கள் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

**எது எவ்வாறெனினும் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் யாப்பு தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை வழங்கப்போவது இல்லை என்ற சமிக்ஞைகளை தற்போதே வெளிப்படுத்தியிருக்கின்றமை மாத்திரம் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## இந்திய முறை கோழிக் குழம்பு

**தேவையான பொருட்கள்**

கோழிக்கறி - ½ கிலோ, பெரிய வெங்காயம் - 2, தக்காளி – 4, இஞ்சி - சிறுதுண்டு, பூண்டு – 15பல், கொத்தமல்லித் தழை – சிறிதளவு, கறிவேப்பிலை – சிறிதளவு, துருவிய தேங்காய் - அரை கப், எண்ணெய் - தேவையான அளவு, காய்ந்த மிளகாய் - 8, கொத்த மல்லி - 2 கரண்டி, சீரகம் - அரை கரண்டி, கராம்பு – 3, பட்டை - சிறு துண்டு, சோம்பு - 1 கரண்டி, மிளகுத்தூள் - 1 கரண்டி, மஞ்சள்தூள் - அரை கரண்டி, எலுமிச்சை சாறு - 1 கரண்டி, உப்பு - தேவையான அளவு

**செய்முறை**



கோழியை நன்கு சுத்தம் செய்து பெரிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். வெங்காயம், தக்காளியைக் கழுவி நறுக்கிக் கொள்ள வேண்டும். இஞ்சி பூண்டினைத் தோலுரித்துப் பொடியாக நறுக்க வேண்டும். பின் தாச்சியில் ஒரு மேசைக் கரண்டி எண்ணெய் விட்டு காய்ந்ததும் மிளகாய், துருவிய தேங்காய், கராம்பு, பட்டை, மல்லி, சீரகம், சோம்பு ஆகியவற்றைப் போட்டு வறுத்து ஆற வைத்து அதனுடன் இஞ்சி, பூண்டு சேர்த்து பட்டுப்போல் அரைத்துக் கொள்ள வேண்டும்.

பின் மீதியுள்ள எண்ணெயை தாச்சியில் ஊற்றி சூடாக்கி, நறுக்கின வெங்காயத்தை அதில் போட்டு வதக்க வேண்டும். அதனுடன் கறிவேப்பிலை இலைகளையும் அரைத்து வைத்துள்ள மசாலாவினையும் சேர்க்க வேண்டும்.

வெங்காயம் நன்றாக வதங்கிய பிறகு தக்காளி, மிளகுத்தூள் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கிளறி வேகவிட வேண்டும். அதன் பிறகு கோழித் துண்டுகளைச் சேர்த்து சிறிது நேரம் வேகவிட வேண்டும். பின் அச் சேர்வையினுள் 2 கப் தண்ணீர் ஊற்றி, எலுமிச்சை சாறு மற்றும் தேவையான உப்பு சேர்த்து மிதமான தீயில் நன்கு வேகவிட வேண்டும். கோழி நன்கு வெந்து மிருதுவானவுடன் இறக்கி, மல்லித் தழை தூவி இறக்க வேண்டும்.

## ஒற்றைத் தலைவலிக்கு என்ன செய்யலாம்

தலையின் ஒற்றை பக்கத்தில் அதிகமான வலி ஏற்படுவது ஒற்றைத் தலைவலியாகும். இந்த வலியானது பல மணிநேரங்கள் அல்லது ஒருநாள் முழுவதும் தொடரலாம், குறிப்பாக பெண்கள் இனப்பெருக்க காலத்தில் ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்படுவர்.



### ☞ அறிகுறிகள்

இந்த வலியின், அறிகுறிகளானது நபர்களை பொறுத்து மாறுபடும்.

அதிகமான தலைவலி, தலையில் ஒருவித துடிப்பு, உடல் ரீதியான செயல்பாட்டின் போது வலி அதிகரித்தல், அன்றாட வேலைகளை கூட செய்ய முடியாமல் திணறுதல். உடல்நிலை சரியில்லாமல் போதல், வெளிச்சம் மற்றும் சத்தத்தை கேட்கும்போது ஒரு வித படபடப்பு ஏற்படுதல், இருட்டிய அறையில் அமர்ந்திருத்தல். வியர்த்தல், வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, வாந்தி போன்றவை.

### ☞ சூழ்நிலைகளை பார்த்தவுடன் தோன்றும் தலைவலி

சிலருக்கு தாங்கள் இருக்கும் சூழ்நிலைகள் பிடிக்கவில்லையென்றால் ஒற்றைத் தலைவலி ஏற்படும், அதாவது அந்த இடத்தினை அவர்கள் தொந்தரவாக கருதுவார்கள்.

குழப்பமான எண்ணங்கள் தோன்றுதல், தங்கள் கண்முன் ஏதேனும் இருந்தாலும் அவை பார்வைக்கு புலப்படாதவாறு இருத்தல்.

பேசுவதற்கு சிரமப்படுதல், தோள்கள் மற்றும் கழுத்துப்பகுதி விறைத்துப்போயிருத்தல், விரும்பத்தகாத நறுமணம்.

தொடரும்

அழகுக் குறிப்பு

## அழகுக்கு அழகு சேர்க்க செய்யவேண்டியவை

**பார்க்க இழகாக தோற்றமளிக்க வேண்டுமா? செயற்கை முறைகளை விடுத்து இயற்கை இலகு வழிகளைப் பின்பற்றித் தான் பார்ப்போமே!!!**

✓ 1 தே.கரண்டி தேனில் 1 தே.கரண்டி எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, முகத்தில் தடவ வேண்டும். பின் 20 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால், சருமம் புத்துணர்ச்சியாக இருப்பதுடன் பொலிவாகவும் இருக்கும்.

✓ நன்கு கனிந்த பப்பாளியை மசித்து, அதில் 1 மே.கரண்டி தேன் கலந்து, முகத்தில் தடவி மசாஜ் செய்ய வேண்டும். 15 நிமிடம் கழித்து கழுவினால் முதுமைக் கோடுகள் மறைந்து மென்மையாக இருக்கும்.

✓ 1 மே.கரண்டி தேனுடன் 1 தே.கரண்டி மில்க் க்ரீம் சேர்த்து கலந்து, முகத்தில் தடவ வேண்டும். 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் சுருக்கங்கள் மறைந்து விடும்.



**பெண்களுக்கு அழகே கருகருவென இருக்கும் தலைமுடிதான். சிலருக்கு தலைமுடி செம்பட்டை நிறத்தில் இருக்கும், அதனை அழகு என்று நினைத்து அப்படி விட்டுவிடாதீர்கள். சத்துக்கள் குறைபாட்டினால் கூட முடியின் நிறம் மாறலாம், எனவே செம்பட்டை நிறத்தில் இருக்கும் முடியினை கருமையாக மாற்ற சில வழிகள் இதோ,**

✓ ஆமணக்கு எண்ணெயினை தலையில் விட்டு நல்ல மசாஜ் செய்து பின்பு குளிக்கவும், சில மாதங்களில் செம்பட்டை நிறம் கருமையாக மாறும்.

✓ தினமும் தலைக்கு குளிக்கும் முன்பு நல்ல தேங்காய்ப் பால் தேய்த்து பின்பு குளிக்கவும்.



✓ நில ஆவாரை, மரிக்கொழுந்து இரண்டையும் சம அளவு எடுத்து நன்றாக அரைத்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் நன்றாக தலையில் ஊறிய பின்பு குளிக்கவும்.

✓ தினமும் கட்டாயம் தலைக்கு தேங்காய் எண்ணெய் தேய்த்து வரவும். ஆலீவ் ஆயிலை தலைக்கு தேய்த்து மசாஜ் செய்தாலும் நல்ல பலன் கிடைக்கும். தினமும் உணவில் கீரை வகைகளும், செம்பருத்தி பூவும் சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

✓ முட்டை வெள்ளைக் கருவைத் தலையில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவி விடவேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வந்தால் செம்பட்டை மறையும்.

மரிகொழுந்து இலையையும், செம்பருத்தி இலையையும் அரைத்து, தலைக்கு தடவி குளித்து வந்தால், செம்பட்டை முடி கறுப்பாகும்.

✓ கரட்டையும் எலுமிச்சம் சாற்றையும் தேங்காய் எண்ணையில் கலந்து தினமும் தடவி வந்தால் முடி நன்றாக கருப்பாக வளரும்.

## நீண்டு செல்லும் பட்டியல்....

தற்போது பத்திரிகையை கையிலெடுத்தால் நாளாந்தம் சிறுமி பாலியல் வன்கொடுமை கொலை என ஒன்றாவது வந்துவிடுகின்றன. வித்தியா, செயா. ஹரிஸ்ணவி ........ என நீண்டு செல்லும் பட்டியலை என்ன சொல்வதென்று தெரியவில்லை.

இப்படியான கொடுமைகள் நடந்த பிறகு பெண்கள் அமைப்புகள் ஆர்பாட்டங்களை நடத்துவதும் கண்டனங்களை தெரிவிப்பதும் அதற்கு அதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் ஆறுதல் கூறுவதும் நடவடிக்கை எடுக்கிறோம் என வாக்குறுதிகளை வழங்கிவிட்டு சென்றுவிடுவதும் தொடர் செயற்பாடாக போய்க்கொண்டிருக்கிறது.

அடுத்த சம்பவம் நடக்கும் வரை இந்த பேச்சு எல்லா தரப்பிலும் ஓய்ந்துவிடும் மறுபடி பெண்கள் ஆர்பாட்டங்களை முன்னெடுத்து மறுபடி கண்டனம் தெரிவித்துவிட்டு வழங்கும் மகஜர்களெல்லாம் குப்பைத் தொட்டிகளைத் தான் அலங்கரிக்கின்றன போலும்.

இதற்கு மேலாக பிள்ளைகளை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யும் கொடூரர்களை தண்டிக்க நீதிமன்றங்கள் எடுத்துக்கொள்ளும் காலமும் பிரச்சினையாகத்தான் உள்ளது காலந்தாழ்த்தப்பட்ட நீதி இவ்வாறான காமுகர்களுக்கு வாய்பாக மாறியுள்ளது எனலாம். இப்படியே தொடர்ந்து சென்றால் எமது சமூகத்தின் நிலைதான் என்ன?

பச்சிளம் குழந்தைகளென்றும் பாராமல் அவர்களை நாசப்படுத்துபவர்களை மனிதர்கள் என்று கூறுதல் நியாயம் தானா? அப்படியானவர்களை விரைவாக தண்டிக்க ஏன் இவ்வளவு தாமதம் விசாரணை விசாரணை என்று காலம் நீடித்துச் செல்லாமல் இதற்காக விசேட பொறிமுறைகளை ஏற்படுத்தாத வரை இப்படியான சம்பவங்களுக்கு முடிவு வரபோவதில்லை.

இது ஒரு பக்கம் இருக்க இப்படியான சம்பவங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ள நிலையில் பெற்றோர் அலட்சியத்துடன் நடந்துகொள்வதை என்னவென்பது! தமது பிள்ளைகளை கவனமின்றி விட்டு இப்படி ஒரு சம்பவம் நடந்த பிறகு ஆயிரம் காரணம் கூறியும் பயனென்ன? எனவே பெற்றோர் தமது பிள்ளைகள் விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

எமது இளம் சமூகத்தை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உண்டு என்பதை நாம் எவரும் மறந்துவிட முடியாது இனிவரும் காலங்களிலேனும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க யாவரும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

**செல்வி.க.வினுஷியா**
செயலாளர்,
திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு



வர்ஷா யூட்றெஜி
(வயது 6ல் - திருகோணமலையில்)



வித்தியா
(புங்குடுதீவில்)


ஹரிஷ்ணவி
(வயது 14ல் - வவுனியாவில்)

???


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 19

01. அருகில் தரப்பட்டுள்ள திண்மவடிவமானதுநான்முகியிலிருந்து அதே வடிவான சிறிய நான்முகி வெட்டி நீக்கப்பட்டால் கிடைக்கும் உருவிலுள்ள, பண்புகள் முறையே
(1) முகங்கள் - 04, விளிம்புகள் - 06, உச்சி - 04
(2) முகங்கள் - 05, விளிம்புகள் - 09, உச்சி - 05
(3) முகங்கள் - 05, விளிம்புகள் - 09, உச்சி - 06



**படத்தில் காட்டப்பட்டவாறு அம்புக்குறியால் காட்டப்பட்ட பக்கத்திற்கும் அதற்கு எதிர்பக்கத்திற்கும் ஒரே வர்ணங்கள் பூசப்பட்டுள்ளன.**




02. நீலம், பச்சை ஆகிய நிறங்கள் மட்டும் பூசப்பட்டிருக்கும் சதுர முகிகள் எத்தனை?
(1) 4 (2) 8 (3) 12

03. எந்த வர்ணமும் பூசப்படாத துண்டுகள் எத்தனை?
(1) 8 (2) 1 (3) 6

03ஆம், 04ஆம் வினாக்களில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து விடையளிக்க.

03. ஒற்றை எண்ணின் கூட்டுத் தொகை இரட்டை எண்களின் கூட்டுத்தொகையை விட அதிகமாயின் ஞ இல் X வரைக.
அவ்வாறு இல்லை எனின் இ இல் X வரைக.

04. இங்குள்ள 2 களின் கூட்டுத் தொகையும் 3 களின் கூட்டுத்தொகையும் சமனாயின் சி யைச் சுற்றி வட்டம் வரைக. அவ்வாறு இல்லை எனின் சூ வைச் சுற்றி வட்டம் வரைக.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 3 | 5 | 2 | ஞ |
| 4 | 7 | சி | 8 | 5 |
| 2 | 8 | 3 | சூ | 1 |
| 7 | இ | 9 | 4 | 1 |

05. இலங்கையில் அமைந்திராத ஒரு ஓயா?
1. தெதுறுஓயா 2. மல்வத்து ஓயா 3. கிரிந்தி ஓயா 4. ரன் ஓயா

06. கீழே விவசாயிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் தரப்பட்டுள்ளன. இவ் உபகரணங்களை அவதானித்து உபகரணங்களின் பயன்பாட்டை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.



(1) உழுதல், கொத்துதல், மட்டப்படுத்தல்
(2) கொத்துதல், மட்டப்படுத்தல், உழுதல்
(3) உழுதல், மட்டப்படுத்தல், கொத்துதல்

07. சிறிய பாத்திரமொன்றினால் 11 தடவைகள் நீர் ஊற்றி பெரிய பாத்திரமொன்று நிரப்பட்டது சிறிய பாத்திரம் ஒன்றின் கனவளவு 100ml ஆகும். எனின் பெரிய பாத்திரத்தின் கனவளவு?

..............................................................................

08. பால்த்தன்மையுடைய தாவரம் அல்லாதது?
வில்வம் 2. பப்பாசி 3. பலா 4. இறப்பர்

09. சதீஸ் தனது பயணத்தில் 2/5 பங்கை வசு வண்டியிலும் 1/5 பங்கை சைக்கிள் வண்டியிலும் மீதித் தூரத்தை நடந்தும் சென்றான். நடந்து சென்ற தூரம் 4.5km எனின் அவன் வசு வண்டியில் பயணித்த தூரம் எத்தனை km?

..............................................................................

10. இலங்கையின் மிகப் பெரிய மாவட்டம்?
1. அநுராதபுரம் 2. கொழும்பு 3. நுவரெலியா 4. புத்தளம்

11. நீர் குறைவாகக் தேவைப்படும் தாவரம்?
1. நெற்பயிர் 2. கொஹில 3. பொன்னாங்கன்னி 4. கற்றாளை



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## மாட்டிய நரி



ஒரு கிராமத்தின் ஒதுக்குப் புறமாக இருந்த மடத்தில் ஒரு சந்நியாசி இருந்தான். அவன் பெயர் தேவசன்மா. அவன் பிச்சை எடுத்துச் சேர்த்த காசையெல்லாம் கந்தையில் முடித்துத் தன் அக்குளில் வைத்துக் கொண்டு திரிந்தான். இரவும் பகலும் அந்தக் கந்தை அவனை விட்டு நீங்காமல் இருந்தது.

சந்நியாசி பணமுடிப்பை எப்போதும் அக்குளில் வைத்துக் கொண்டு திரிவதை திருடன் ஒருவன் கவனித்துப் பார்த்தான். அந்தப் பணப்பையை எப்படித் திருடலாம் என்று யோசித்தான். இதற்கு அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். ஒருநாள் சந்நியாசியிடம் சென்று, சந்நியாசியின் கால்களில் விழுந்து வணங்கினான்.

சுவாமிகளே! இந்த உலகமே ஒரு மாயை... காலை மலர்ந்து மாலை உதிரும் மலருக்கு ஒப்பானது. வாழ்க்கையோ காய்ந்த புல்லில் பற்றிக் கொண்ட நெருப்புப் போன்றது. வாலிபப் பருவமோ அருவியின் வேகத்தைப் போன்றது. இவை அனைத்தையும் நான் நன்றாக உணர்ந்தவன். தங்களிடம் உபதேசம் கேட்க வந்திருக்கிறேன். என்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டு நல்வழி காட்ட வேண்டும்! என்று வேண்டினான்.

தேவசன்மாவும் அவனைத் தன் சீடனாக ஏற்றுக் கொண்டான். அந்தத் திருடனும் மிகவும் நல்லவன் போல் சந்நியாசிக்குப் பணிவிடைகள் செய்து வந்தான்.

ஒருநாள் ஓர் அந்தணன் இவர்களுக்கு விருந்து வைத்தான். விருந்துண்டு சென்ற பிறகு, சீடன் தன் தலையில் கிடந்த ஒரு துரும்பைக் காட்டி, சுவாமி! நமக்குச் சோறு போட்ட அந்தணன் வீட்டிலிருந்த இந்தத் துரும்பு என்னையும் அறியாமல் ஒட்டிக் கொண்டு வந்து விட்டது. உணவழித்தவன் வீட்டுப் பொருளை ஒரு துரும்பானாலும் எடுத்து வரலாமா? இதோ நான் ஓடிப்போய் இதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்! என்று கூறி ஓடினான்.

சிறிது தூரம் சென்று ஒரு மறைவான இடத்தில் நெடுநேரம் உட்கார்ந்திருந்து விட்டு அவன் திரும்பி வந்தான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தேவசன்மாவுக்குத் தன் சீடன் மேல் நம்பிக்கை அதிகமானது.

ஒருநாள் சந்நியாசியும் சீடனும் ஒரு குளக்கரையை அடைந்தனர். குளத்தில் இறங்கிக் கைகால் கழுவிக் கொண்டு வருவதாக சந்நியாசி போகும்போது கரையில் இருந்த சீடனிடம் என்றும் விட்டுப் பிரியாத கந்தை முடிப்பைக் கொடுத்து, வைத்திருக்கும் படி கூறிவிட்டுப் போனார்.

சந்நியாசி கைகால் கழுவிக் கொண்டு திரும்பும் போது குளத்தின் எதிர் கரையில் இரண்டு செம்மறி ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஆடுகள் இரண்டும் ஆங்காரத்தோடு விலகிப் பின் வாங்குவதும் மீண்டும் ஓடிவந்து ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்வதுமாக இருந்தன. மண்டையில் இருந்து ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

தூரத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த குள்ளநரி ஒன்று கீழே சொட்டும் ரத்தத்தை நக்கிச் சாப்பிட எண்ணி அங்கு வந்தது. ஆடுகள் விலகிப் பின்னடையும் போது புகுந்து ரத்தத் துளிகளை நக்கிச் சுவைத்தது. ஆடுகள் முட்டிக் கொள்ள முன்னே வரும் போது நரி தந்திரமாக பின்னே சென்று விடும். இவ்வாறு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் சந்நியாசி.

அடப்பாவமே! இந்தக் குள்ள நரியின் முட்டாள் தனத்தை என்னவென்று சொல்வது! ஆட்டுச் சண்டையின் மத்தியில் அது சிக்கிக் கொண்டால் நிச்சயமாக அது செத்துப்போகுமே வேறு எதுவும் நடக்கப் போகிற மாதிரி எனக்குத் தோன்றவில்லை!" என்று எண்ணிச் சிரித்தார்.

மறுபடியும் ஆடுகள் முட்டிச் சண்டையிட நெருங்கின. ரத்தத்தைச் சுவைத்து ருசி கண்ட நரி ஆவலோடு இப்போது நெருங்கி வந்து கொண்டே இருந்தது. ஆடுகளின் மத்தியில் வசமாக மாட்டிக் கொண்ட நரி கீழே தள்ளப்பட்டு உயிரைவிட்டது. ஆட்டுச் சண்டையில் குள்ளநரி செத்தது. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சந்நியாசி தன்னை மறந்து நின்று கொண்டிருந்தார்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணிய சீடன் பணமுடிப்பை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

நரி சாகப்போகிறதே என நினைத்து, அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே தன்னுடைய பணமூட்டையை இழந்தார் அறிவுகெட்ட தேவசன்மா,

**சிந்திக்க**

**கஷ்டப்படுபவனுக்கு சிரிக்கத் தெரியாது:**
**சிரிப்பவனுக்கு கஷ்டம் தெரியாது :**
**கஷ்டத்திலும் சிரிப்பவனுக்கு ....**
**தோல்வியே கிடையாது !!!**

**பாராட்டு பெறுவோர்**

*வி.பிரதீஷன், 93, கந்தசுவாமி கோவலி வீதி, திருகோணமலை*

*கு.பிரதீஷ்வர், ஆத்திமோட்டை, திருகோணமலை*

**மலைமுரசு**



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ. கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01.
ஐந்து ஐஸ்கிறீம்களையும் எட்டு யோகட்களையும் செய்து முடிப்பதற்கு ரூ350 தேவை. ஓர் ஐஸ்கிறீமின் விலை ஒரு யோகட்டின் விலையிலும் பார்க்க ரூபா 5 இனால் கூடியது.

1. ஓர் ஐஸ்கிறீமின் விலை ரூx எனவும் ஒரு யோகட்டின் விலை ரூ y எனவும் கொண்டு x, y ஆகியன இடம்பெறும் ஓர் ஒருங்கமைச் சமன்பாட்டு சோடியை உருவாக்குக
2. அச்சமன்பாட்டு சோடியைத் தீர்த்து ஓர் ஐஸ்கிறீமின் விலையையும் ஒரு யோகட்டின் விலையையும் தனித்தனியே காண்க.
3. ஒரு குறித்த பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க யோகட்டுக்களின் எண்ணிக்கை அப்பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க ஐஸ்கிறீம்களின் எண்ணிக்கையிலும் பார்க்க ஒன்றினால் கூடியது. அப்பணம் எவ்வளவு?

02.
மாணவன் ஒருவன் முதலாம் மாதத்தில் ரூ10, இரண்டாம் மாதத்தில் ரூ15, மூன்றாம் மாதத்தில் ரூ 20 என்றவாறு பணத்தை சேமித்தான்.
1. அவெண்களின் மூலம் வகைக்குறிக்கப்படும் விருத்தி யாது?
2. அவ்விருத்தியில் 21ம் உறுப்பு யாது?
3. மாணவன் சேமிக்கும் மொத்தத் தொகை எத்தனை மாதங்களுக்குப் பின்னர் ரூ450 ஆக இருக்கும்?
4. மேலதிகமாக 131 மாணவர்கள் பங்குபற்றினால் மேலதிகமாக காட்சியில் 3 நிரைகளைச் சேர்க்கத்தக்கதாக இருக்கும் என அதிபர் கூறுகின்றார். இக்கூற்று உண்மையன்று எனக் காட்டுக.

b. பெருக்கல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 5 உம், ஐந்தாம் உறுப்பு 40 உம் ஆகும்.
1. பொதுவிகிதம் 2. முதலாம் உறுப்பு 3. முதல் ஏழு உறுப்புக்களின் கூட்டுத் தொகை என்பவற்றைக் காண்க.

## பாடம் : வரலாறு

01.
1) காரணகாரிய அடிப்படையில் செயற்பட்ட 3கிராம வகைகளும் எவை?
2) கைத்தொழில் புரட்சி என்பது ஒரு தொடர் நிகழ்வாகும் இதனை காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?
3) கி.பி1766 ஒப்பந்நத்தின் விளைவுகளை குறிப்பிட்டு ஆராய்க?
4) 1978 அரசியல் யாப்பின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு கபணப்பட்ட அதிகாரங்களை விளக்குக?
5) லிபரல்வாதம் மானுடவாதம் வர்க்கபேதம் என்பவற்றை விளக்குக?

02.
1) சர்வஜனவாக்குரிமை வழங்கப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் எவை?
2) இலங்கையின் கற்கால மனிதனின் சுற்றாடல் வலயங்கள் எவை?
3) கற்கால மனிதனின் (1) உணவுப்பழக்கவழக்கம்
(2) தொழில்நுட்பம்
(3) வாழ்க்கை முறை என்பன பற்றி ஆராய்க?
4) உலர் வலயத்தில் காணப்பட்ட மண் வகையை குறிப்பிட்டு விவவாய நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்துக?
5) சோழர்கள் அனுராதபுர இராச்சியத்தை கைப்பற்ற உதவிய காரணிகள் எவை?

05) உங்களுடைய ஆயுதங்களால் உங்களை தாக்கமாட்டேன் என பிரித்தானியருக்கு கூறியவர் யார்?
1) தேசிய அரசுகள் தோற்றம் பெறக்காரணம் யாது?
2) 18ம் நுற்றாண்டில் பிரான்ஸ் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திய பிரதேசம் யாது?
3) ஐரோப்பியர் பேரரசுகளைப் பரப்புவதற்கான காரணம் யாது?
4) நாடுகாண் பயணங்களை ஆரம்பித்த ஐரோப்பியர்களின் பிரதான நோக்கம் யாது?
5) 20ம் நுற்றாண்டில் ஸ்பானியா எந்த பிரதேசத்தை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தது?

ஆசிரியர் . திரு.த.ராஜேஸ்வரர்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

*Study the chart and fill in the blanks. Ambitions of Ravi's friends*

| Name of friends | Ambitions |
|---|---|
| Ram | Linguist |
| Naveen | Doctor |
| Lojan | Scientist |
| Mithulan | Cricketer |
| Subojan | Pilot |
| John | Singer |

1. Subojan has to join ............... a) the main subject of bio stream
2. Lojan must ...read....................... b) more about inventions and discoveries
3. Ram should .. study ...................... c) language patterns and sounds
4. Naveen should ....learn................. d) in the cricket team
5. Mithulan has to ...be.................. e) learn and practice music
6. John should ................................ f) an aviation training centre.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**விகுதி**

விகுதி என்பது பகுபதங்களின் இறுதியிலே வந்து திணை பால் எண் இடம் என்பனவற்றையோ ஏவல் வியங்கோள் முதலான பொருள்களையோ உணர்த்தி நிற்கும் ஒரு சொல்லாக்கக்கூறு ஆகும்.

பெயர் விகுதிகள் :

| | |
|---|---|
| குழையன் (அன்) | கோமான் (மான்) |
| வானத்தான் (ஆன்) | பிறன் (ன்) |
| குழையர் (அர்) | குழையள் (அள்) |
| தோன்றள் (அல்) | வானத்தார் (ஆர்) |

**தொழிற்பெயர் விகுதிகள்**

| | | | |
|---|---|---|---|
| நடத்தல் (தல்) | நடக்கை (கை) | வரவு (உ) | புலவி (வி) |
| ஆடல் (அல்) | பார்வை (வை) | மறதி (தி) | சாக்காடு (காடு) |
| வாட்டம் (அம்) | போக்கு (கு) | புணர்ச்சி (சி) | நடவாமை (காடு) |
| கொலை (ஐ) | நடப்பு (பு) | கோட்பாடு (பாடு) | |

செய்தமை, செய்கின்றமை } மை
செய்தது, செய்கின்றது, செய்வது } து

**பண்புப் பெயர் விகுதிகள்**

| | | | |
|---|---|---|---|
| நன்மை (மை) | தொல்லை (ஐ) | மாட்சி (சி) | மாண்பு (பு) |
| நலம் (அம்) | நன்றி (றி) | | |

**தெரிநிலை வினைமுற்று விகுதிகள்**

நடந்தனன் (அன்) ஆண்பால் விகுதிகள்
நடந்தனள் (அள்) பெண்பால் விகுதிகள்



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### கட்டுரை வினாக்கள்

02.
**A. கலம் எனப்படுவது வெறுங்கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய அமைப்பாகும். உயிரிகள் யாவும் கலங்களால் ஆனவை. ஒரு கல அங்கிகளும் இயற்கையில் காணப்படுகின்றன. விருத்தியடைந்த விலங்குகள் இழையங்கள், தொகுதிகள் எனக் கூறுமளவிட்கு உடல் அமைந்துள்ளது.**

(1) கலம் என்றால் என்ன? (2) இழையம் என்றால் என்ன?
(3) தொகுதி என்றால் என்ன?
(4) பின்வரும் தொழிற்பாடுகளுடன் தொடர்பான தொகுதிகளைப் பெயரிடுக.
a) வாயுப் பரிமாற்றம் b) பதார்த்தங்கள் கொண்டுசெல்லல்
c) உடல் இயக்கம்
(5) மேல் கூறிய தொழிற்பாடுகளுக்காக நீர் குறிப்பிட்ட தொகுதிகள் கொண்டுள்ள சிறப்பம்சம் / இசைவாக்கம் ஒவ்வொன்று தருக.
(6) அங்கி ஒன்றின் ஒழுங்கமைப்பு மட்டங்களை அம்புக்குறியின் உதவியுடன் இணைத்துக்காட்டுக.
(7) பிரதான தாவர இழையங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(8) மேல்க் கூறிய இழையங்களின் தொழிற்பாட்டை குறிப்பிடுக.
(9) நீர் வினா (7) இல் குறிப்பிட்ட இழையங்கள் வெவ்வேறு கூறுகளால் ஆனவை. அக் கூறுகளைக் குறிப்பிடுக.
(10) a) ஒருகல அங்கி 2 இனைத் தருக.
b) மேல் கூறிய அங்கிகளால் பொதுவாக நிகழும் இனப்பெருக்க முறை யாது?

**B. ஓய்விலிருந்து இயக்கத்தை ஆரம்பிக்கும் பொருள் ஒன்று 6 செக்கனில் சீரான ஆர்முடுகலிற்கு உட்பட்டு வேகம் 15 செக்கனைப் பெறுகின்றது. அதன் பின்னர் அவ்வேகத்துடன் சீராக மேலும் 6 செக்கனிற்கு இயங்கும் அப்பொருள் இறுதியில் சீரான அமர்முடுகலிற்கு உட்பட்டு 3 செக்கனில் ஓய்விற்கு வருகின்றது.**

1. இவ்வியக்கம் பற்றிய வேக, நேர வரைபை வரைக.
2. முதல் 6 செக்கனில் ஆர்முடுகலைக் காண்க.
3. முதல் 6 செக்கனில் இயங்கிய தூரம் யாது?
4. சீரான வேகத்துடன் இயங்கிய தூரம் யாது?
5. இறுதி 3 செக்கனில் அமர்முடுகல் யாது?
6. இறுதி 3 செக்கனில் இயங்கிய தூரம் யாது?

ஆசிரியர் . திரு.த.சேகரன்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவில் ஏன்...

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ...ப்பட கிழக்கு மாகாணசபையின் அரசியலாளர்களையும் இக்கவன - ஈர்ப்புப் போராட்டம் கவர்ந்த - ...ழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போராட்டத்தினைப் பார்வை-யிட்டுச் செல்ல வந்திருந்த எதிர்க்-கட்சித் தலைவர் தலைமையிரான குழுவினரிடம் சம்பூரில் அனல்மின் நிலையம் அமைவதைத் தடுக்குமாறு மக்கள் வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

அப்போது அங்கு கூடிய மக்கள் "தின்னுற சோத்துல ஏன் ஐயா நஞ்சி வச்சீங்க?..... எங்கட புள்ளயள நிம்மதியா வாழ விடுங்க ஐயா" எனக்குரலெழுப்பியிருந்தனர்.

அதனையடுத்து அங்கு கருத்தறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இந்தியா வராவிட்டால் இந்த இடத்தைச் சீனா எடுத்துக்-கொள்ளும். எல்லாம் முடிந்துவிடும். முதலில் கடற்படையினர் வெளியேறவுள்ள நிலத்தில் மீள்குடியேற்றத்தைச் செய்வோம். அதன் பின்னர் பார்ப்போம். இங்கு அனல் மின்நிலையம் அமைவதால் உங்களுக்குப் பிரச்சனைகள் ஏற்படும் எனச் சொல்கின்றீர்கள். நாங்கள் செய்யவேண்டிய விடயத்தைச் செய்வோம் எனத் தெரிவித்திருந்தார்.

## தமிழ் அரசியல் கை....

மறுத்துள்ளது. உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உடல் நிலை தொடர்பில் தாம் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருவதாகவும், தொடர்ந்தும் வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான து'ஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, 6 அரசியல் கைதிகள் நேற்றைய தினம் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

## கட்டடிக்குளம் காணிகளை மீட்பது எவ்வாறு???

திருகோணமலை குச்சவெளி கட்டடிக்குளம் பகுதியிலுள்ள பொதுமக்களின் விவசாய நிலத்தை ஊர்காவற்படை பலாத்காரமாக பறித்து வைத்துள்ளதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் விவசாயம் செய்யச்சென்ற பொதுமக்களை ஊர்காவற்படையினர் அச்சுறுத்திய-தாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கட்டடிக்குளம் விவசாய நிலத்தில் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரை தமிழ் மக்கள் விவசாயம் செய்து வந்துள்ளனர்.

அதற்கான ஆவணங்களும் அவர்களிடம் உள்ள நிலையில், உள்நாட்டில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர், அப் பிரதேசம் மக்கள் நடமாட்டம் இல்லாமல் இருந்தது.

இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் ஊர்காவற்படை அப்பகுதியை பலாத்காரமாக பறித்து வைத்துள்ளது என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்திருப்பதாகச் சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

## கொலையில் சம்....

வயதான குகதாஸ் தர்சன் என்ற சிறுவன் ஜனவரி 25 ஆம் திகதி மாலை காணாமல்போன நிலையில் அன்றிரவு பாழடைந்த கிணற்றிலிருந்து கல்லில் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்-பட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மூதூர் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான விசாரணைக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து உயிரிழந்த சிறுவனின் மைத்துனனான 15 வயதுடைய சிறுவன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தேகநபரான சிறுவனின் வாக்கு மூலத்தை அடுத்து வழக்கு விசாரணையை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தி வைக்கப் பட்டதுடன் சந்தேகநபரான சிறுவனை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில்...

பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் பாகம் பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஆவணங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வாகன உதிரிப் - பாகங்கள் நீதிமன்ற அனுமதியுடன் அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக விசாரணை நடத்தப்படவுள்ளது.

## அத்துமீறி....

தெரிவித்துள்ளார்.

கடந்த 3ம் திகதி மூதூர் நீதிமன்றில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையின் முதலாவது அமர்வில் பாதிக்கப்பட்டோரின் தரப்பில் கொழும்பில் இயங்கும் மனித உரிமை அமைப்பின் சார்பில் பிரசன்னமான சட்டத்தரணி அரச காணியில் அத்துமீறி இம்மூன்று குடும்பத்தினரும் குடியேறியுள்ளதாகத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்-பட்டுள்ளமை தொடர்பாகத் தமது தரப்பின் ஆட்சேபணையை வெளியிட்டார்.

குறித்த மூன்று குடும்பங்களும் அத்துமீறி குடியேறவில்லை எனவும், மீள்குடியேற்ற திட்டத்தின் கீழ் சம்பூரிலுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே குடியேறிய மக்களுடன் இணைந்து இவர்களும் தமது பூர்வீகக் காணிகளில் குடியேறியுள்ளதாக மன்றில் தெரிவித்திருந்தார்.

தமது காணிகளில் இருந்து தம்மைக் கட்டாயமாக வெளியேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால் பிரதியீடாக மாற்று இடங்களை வழங்கும்போது அவை வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக இருக்க வேண்டுமேயொழிய பெருங்காடகளுக்குள் காணிகளைத் தந்து குடியேறுமாறு தம்மை வற்புறுத்த வேண்டாம் என்றும் அம்மூன்று குடும்பத்தாரும் தெரிவித்துள்ளனர்.

மன்றில் வாய்மொழியூடாக முன்வைக்கப்பட்ட ஆட்சேபணைகளை எழுத்து மூலம் தாக்கல் செய்வதற்காக கோரப்பட்ட கால அவகாசத்தை வழங்கிய நீதிபதி அதற்கமைய, எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி பிரதிவாதிகள் சார்பில் ஆட்சேபனை மனுத்தாக்கல் செய்ய முடியும் என அறிவித்ததுடன் அன்றைய தினத்-திற்கே வழக்கு விசாரணையையும் ஒத்தி வைத்துள்ளார்.

## ஒரு நாடு இரு....

...

ஒரு தேசமாக உள்ளனர்.

ஒரு தேசத்திற்குரிய மக்களுக்கு பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமை-யும், தனித்துவமான இறைமையும் உண்டு.

மக்கள் கூட்டம் என்பது சிறுபான்மை இன மக்களையும், தேசமாக உள்ள மக்களையும் குறிப்பதால் தமிழ் மக்களின் அரசியல் அந்தஸ்த்தினை கேள்விக்குட்படுத்தக்கூடிய வகையில் மக்கள் கூட்டம் என அழைப்பது பொருத்தமற்றது.

தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதற்கான ஆணையை 1956ம் ஆண்டு தொடக்கம் எமது மக்கள் வெளிப்படையாக வழங்கி வருகின்றனர். தேசம் என்ற அந்தஸ்த்தினை அவர்கள் இதுவரை விட்டுக் கொடுக்கவில்லை.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் மறுபக்க-த்தில் சிங்கள தேசத்தின் செயற்பாடுகள் பேரினவாதத்தின் உச்சத்திற்குச் சென்றுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் தாம் ஒரு தேசம் என்ற அந்தஸ்த்தை கைவிடுவதானது சிங்கள தேசத்திற்குள் தமிழ்த் தேசத்தை கரைப்பதற்கு தமிழ் மக்கள் விரும்பி ஒப்புதல் வழங்கும் செயற்பாடாக அமையும்.

கனடாவில் கியூபெக் மாகாணத்-திலுள்ள பிரெஞ்சு மொழி பேசும் மக்களும், ஸ்பெயினில் ஹத்தலோனியா மக்களும், பாஸ்க் இன மக்களும், ஐக்கிய இராச்சியத தில் இஸ்கொட்லாந்து மக்களும் தாம் ஓர் தனித் தேசம் என்ற அடிப்படையில் தமது அரசியலை முன்னெடுக்-கின்றனர்.

தமிழ்த் தேசத்தின் இருப்பும் அதன் பாதுகாப்பும் தேசம் என்ற அங்கீகாரத்தை பெறுவதன் மூலமே உறுதி செய்யப்படும்.

எனவே அரசியல் தீர்வானது தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்டு இரண்டு தேசங்கள்-ஒரு நாடு என்ற அடிப்படையில் அமைய வேண்டும். அந்த இலக்கை நோக்கி எமது அரசியல் செயற்திட்டங்களை முன்னெடுப்போம் என முதலாவது தீர்மானம் தெரிவித் துள்ளது.

அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படல் வேண்டும், காணாமல் போகச் செய்யப்பட்டவர்களது விவகாரத்தில் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையைக் கோரி தொடர்ந்து போராடுவோம், இன அழிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பில் முழுமையாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும், யுத்தம் முடிந்த பின்னரும் தொடர்சியாக மேற்கொள்ளப்-பட்டுவரும் கட்டமைப்புசார் இன அழிப்புச் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினரை வெளியேற்ற தொடர்ந்து குரல்கொடுப்போம், மலையக மக்களின் உரிமைகளுக்காக நாம் இணைந்து குரல் கொடுப்போம், கிராமிய உழைப்பாளர்கள் எதிர்நோக்கும் சமூக வர்க்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நாமும் இணைந்து குரல் கொடுப்போம், வறுமையிலிருந்தும், போர் பாதிப்புக் - களிலிருந்தும் மீட்டெடுக்க உழைப்போம், தமிழ்ப் பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறை-களுக்கு எதிராக போராடுவோம் ஆகிய ஏனைய தீர்மானங்களும் நிறைவேறின.

## அனுமதிய...

பிரதேசச் செயலாளரை கும்புறுப்பிட்டி கிழக்கு காந்தி நகர் கிராம மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சகிதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உப தலைவர்களில் ஒருவருமான இரா.ஸ்ரீஞானேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டப் பொருளாளர் ஆறுமுகதாஸ் ஆகியோர் சந்தித்துப் பேசியிருந்தனர்.

அக்கலந்துரையாடலின் போது 2015ம் ஆண்டுடன் வெளிமாவட்ட மீனவர்களுக்கான அனுமதிகள் முற்றாகத் தடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த பிரதேசச் செயலாளர் அதனடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வருடத்திற்கான மீன்பிடி அனுமதியினை திருகோணமலை மாவட்ட மீன்பிடித் திணைக்களத்திடம் கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் பெற்றுக்கொண்டு அவ்வனுமதியைப் பிரதேசச் செயலகத்தில் கையளித்து வாடிகளைக் கட்டுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ம்படித் தெரிவித்த பிரதேசச் செயலாளர் இவ்வனுமதியை பார்வைக்கு வைக்காத வாடிகள் யாவும் இரண்டு வாரத்தின் பின்னர் அகற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் மாவட்ட மீன்பிடித் திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கிய பிரதேசச் செயலாளர் 2015ம் ஆண்டில் நடைமுறைகளை மீறி படகுகளுக்கு அனுமதியளித் - திருந்தமை தொடர்பாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளைக் கவனத்தில் எடுத்து 2016ம் ஆண்டுக்கான மீன்பிடி அனுமதிகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அனுமதியற்ற மீன்பிடி நடவடிக்கைகளின் மீது காவல்துறை - யினருக்கு இருக்கும் அதிகாரங் - களைப் பயன்படுத்துமாறும் பிரதேசச் செயலாளர் காவல்துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

## காணிகள் விரைவில்....

தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 42 கிராம சேவகர் பிரிவில் உள்ள 11 கிராம சேவகர் பிரிவுகளான இலிங்கநகர், மட்கோ, பூம்புகார், சிங்கபுர, கப்பல்துறை, முத்துநகர், சீனக்குடா, கவாட்டிக்குடா, நாச்சிக்குடா, வெள்ளைமணல், சுமேதங்கரபுர ஆகிய பகுதிகள் 1984.09.12 ன் 314-10 இலக்க வர்தமானி அறிவித்தல் படி 1975 ஹெக்ரேயர் பரப்பளவுடைய காணிகள் துறைமுக அதிகார சபைக்கு உரித் - துடையது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இவற்றுள் 07 கிராமங்களில் உள்ள காணிகள் முற்றாக விடுவிக்கப்-படுவதுடன் எஞ்சிய மட்கோ, பூம்புகார், சிங்கபுர, கவாட்டிக்குடா ஆகியவற்றின் 1219 ஹெக்ரேயர் காணிகளை விடுவிக்க துறைமுக அதிகார - சபையிடம் இருந்து அனுமதி கிடைக்க - வில்லை. எனினும் இக்காணிகளும் விடுவிக்கப்படும்.

இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் அக்காணிகளிலேயே தொடர்ந்து குடியிருக்கலாம். மக்களின் இணக்கப்-பாடுகளுடன் இக்காணிகள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் ரணதுங்க தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனித மாதங்கள்

## (அல் குர் ஆனின் விளக்கம்)



இதை நபி(ச) அவர்கள் அங்கீகரிக்காததுடன் அவர்கள் மீது தனது கடுமையான அதிருப்தியையும் வெளியிட்டார்கள்.

மக்கத்துக் காபிர்களைப் பொருத்த வரையில் முஸ்லிம்கள் பலரைக் கொலை செய்தவர்கள் ஊரை விட்டும் விரட்டியவர்கள் உடைமைகளைச் சூறையாடியவர்கள். அவர்கள் முஸ்லிம்களை மக்காவிற்குள் நுழையவிடாமல் தடுத்தவர்கள் என பல தவறுகளைச் செய்தவர்கள். அவர்கள் மீதுதான் தாக்குதல் நடாத்தப்பட்டது. இருப்பினும் நபி(ச) அவர்கள் தனது தோழர்கள் மீது கடுமையான அதிருப்தியை வெளியிட்டார்கள். அச்சந்தர்ப்பத்தில் பின்வரும் வசனம் அருளப்பட்டது.

(நபியே!) புனித மாதத்தில் போர் புரிவது பற்றி உம்மிடம் கேட்கின்றனர். அதில் போர் புரிவது பெரும் குற்றமாகும். (எனினும்) அல்லாஹ்வின் பாதையை விட்டும், (மக்களைத்) தடுப்பதும் அவனை நிராகரிப்பதும், மஸ்ஜிதுல் ஹராமை விட்டும் தடுப்பதும் அங்குள்ளோரை அங்கிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் குற்றமாகும். மேலும், குழப்பம் விளைவிப்பது கொலையை விடப் பெரும் குற்றமாகும் என்று (நபியே!) நீர் கூறுவீராக! அவர்களுக்கு முடியுமானால் உங்கள் மார்க்கத்தை விட்டும் உங்களைத் திருப்புகின்ற வரை உங்களுடன் அவர்கள் போரிட்டுக் கொண்டேயிருப்பார்கள். உங்களில் எவர் தனது மார்க்கத்தை விட்டும் மாறி காபிராக மரணித்தும் விடுகின்றாரோ, அவர்களது செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் அழிந்துவிடும். அவர்கள் நரகவாசிகளாவர். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். (2:217)

தொடரும் .. ..

– இஸ்மையில் லஃபீ –

# ஜெபம்

**சிலநேரங்களில் குழந்தைகளும் சிறார்களும் ஏன் இறக்கின்றனர்?**

ஆனால், இன்னும் வாழவேண்டும் என்பது மற்றொரு புறம். - இது உங்கள் பொருட்டு மிகத் தேவையாய் இருக்கின்றது. -பிலிப்பியர் 1:21-24

**உயிர் சேதமும் பொருட்சேதமும் மனத்துயரையும் வறுமையையும் விளைவிக்கின்ற "போர்" ரை கடவுள் ஏன் அனுமதிக்கின்றார்?**

போர் என்பது கடவுள் அனுமதிக்கின்ற ஒன்று இல்லை. மனிதனின் சுய நலத்தினாலும் அகம்பாவத்தினாலும் கோப மிகுதி-யாலுமே போர் நிகழ்கிறது. கடவுளின்சித்தம் யாரும் யாரையும் கொல்ல வேண்டுமென்பதில்லை. அனைவரும் கடவுளின் அன்புப்பிள்ளை-களாக வாழ கடவுள் ஆசிக்கின்றார்.

**உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமென்ன?**

உங்களுக்குள்ளே போராடிக் கொண்டிருக்கும் சிற்றின்ப நாட்டங்கள் அல்லவா? நீங்கள் ஆசைப்படுவது கிடைக்காததால் கொலை செய்கிறீர்கள் போராசை கொள்கிறீர்கள் அதைப் பெற



முடியாததால் சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். அதை நீங்கள் ஏன் பெறமுடிவதில்லை. நீங்கள் கடவுளிடம் கேட்பதில்லை. யாக்கோபு 4:1-2

**கோவிலுக்கே செல்லாதவர்களின் நிலை என்ன?**

கோவிலுக்குச் செல்வதால் மட்டுமே மோட்சம் சென்றுவிட முடியாது.




www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 09

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ன | 15 | | 2 | 16 | | பு | 17 |
| 3 | | | | 20 | டு | ■ | ■ | |
| | ■ | 4 | ண் | | 23 | | | ம |
| 18 | ■ | 5 | | 21 | | ■ | ■ | 25 |
| 6 | ப | 19 | | | 7 | | | |
| ■ | ■ | 8 ப | | 9 | | | 24 வ | |
| 10 | | 11 | டி | 22 | | ■ | | |
| | ■ | 12 ஹி | | | | | | ண |
| | ■ | 13 | | 14 த | | | | |

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஜ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

முடிவுத் திகதி : 10.03.2016

### இடமிருந்து வலமாக

1. எதற்குப் பயப்படாவிடினும் இதற்குப் பயப்பட்டுத்தான் ஆக வேண்டும்
2. ஆபத்தின் நிறம்
3. கிளிநொச்சியில் உள்ள ஓர் இடம் - ஓரெழுத்து குழம்பியுள்ளது
4. புகையிரதம் செல்லும் பாதை
5. பெண்கள் புகுந்தவீட்டிற்கு எடுத்துச் செல்வது - குழம்பியுள்ளது
6. கமலின் பாரிய சர்ச்சைக்குள்ளான திரைப்படம் - திரும்பியுள்ளது.
7. சாப்பிடும் போது இதுவும் உண்டாகலாம் - குழம்பியுள்ளது
8. திருமண வீட்டில் போடப்படுவது
9. சேகரிக்கப்படுவது தரவு அல்ல - குழம்பியுள்ளது
10. கண்ணாடியின் விஞ்ஞான பெயர்
11. ரெஸ்ட் ஹவுஸ் இன் தமிழ்ப்பதம்
12. அண்மையில் திருமணம் செய்யவிருக்கும் சிங்கள பெண் அமைச்சர்
13. அண்ணாவின் மனைவியை முஸ்லிம்கள் அழைப்பது
14. கூரை இடுவதற்கு இதுவும் பயன்படுத்தப்படும்

### மேலிருந்து கீழாக

1. தவசிகள் அணிவது
2. 12 ஒரே வகை பொருட்களை குறிக்கும் ஓர் சொல் - குழம்பியுள்ளது
10. பால் திரைந்து உருவாவது
15. அமைதி
16. காயம்
17. த.தே.கூ விற்கு போட்டியாக இறங்கியுள்ள கட்சியின் சுருக்கம்
18. சைக்கிளின் ஓர் பாகம்
19. அரசாங்க தொலைக்காட்சி அலைவரிசை
20. குருவினிடத்து கல்வி பயில்பவன் - திரும்பியுள்ளது
21. வெண்ணெய்கட்டியை ஆங்கிலத்தில் இவ்வாறு கூறுவர்.
22. குழந்தைகள் நித்திரை செய்யும் போது வாயினால் வடிவது
23. மழைநேரத்தில் வானத்தில் தெரிவது
24. மீன்பிடிக்க இதிலும் செல்வர்
25. சிவனை இவ்வாறும் அழைப்பர்

### 08 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பூ | 14 மா | லை | ■ | 2 செ | ந் | ம | 15 தா | ரை |
| 3 ம | ர் | லி | ன் | ம | ன் | 4 றோ | மி | யோ |
| ரா | ப | ■ | 16 க | வி | தை | ■ | ர | ■ |
| ங் | க | ■ | ட | ■ | 5 க | ட | ம் | ■ |
| ■ | ம் | ■ | வு | ■ | ல | ■ | 6 நீ | று |
| 7 ம | ட | 17 ம் | ச் | ■ | வி | ■ | க் | ■ |
| த | ம் | த | 8 சீ | வ | ன் | ■ | 9 ரோ | ம் |
| யா | ■ | 10 பு | ட் | டு | பா | ■ | ■ | ■ |
| னை | ■ | றா | டு | 11 பு | 12 கை | தி | 13 யோ | கி |

பரிசு பெறுபவர்கள்

எம்.பி.அகிலன், 30 கல்லூரி வீதி

ம.தன்யா, 32/4 மத்தியவீதி, உவர்மலை

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# இவ்வார இராசி பலன்

**மேஷம்** : மனதிலும், செயலிலும் முரண்பாட்டை உருவாக்கலாம். விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடைக்கும். போட்டி குறையும். பணவரவு சீராகும். தொழில் செழிக்கும்.

**ரிஷபம்** : மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். வாழ்க்கையில் நடக்கும் பிரச்னைகளால், புதிய அனுபவம் பெறுவீர்கள். பேச்சும், செயலும் பரிமளிக்கும்.

**மிதுனம்** : தடைகளைக் கடந்து, முன்னேற்றப் பாதையில் நடை போடுவீர்கள். உங்களை இகழ்ந்து பேசியவர்கள் கூட, மனம் திருந்தி நட்பு கொள்வர். வீட்டில் பாதுகாப்பு அவசியம்.

**கடகம்** :குடும்பத்தில் நற்பெயர் பெறுவீர்கள். கடன் தொந்தரவு குறையும். மனக்குழப்பம் ஏற்பட லாம். வியாபாரம் வளர்ச்சி பெற கடும் முயற்சி தேவைப்படும்.

**சிம்மம்**: அவசரச் செலவுக்கு கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் வரலாம். அக்கம் பக்கத்தவரிடம் தேவையற்ற விஷயம் பேச வேண்டாம். பொறுமை தேவை.

**கன்னி** : பொறாமையுடன் பேசியவர்கள் வியந்திடும் வகையில் செயல்படுவீர்கள். பேசும் வார்த்தை வசீகரமாக இருக்கும். வியாபாரம் செழித்து வளரும்.

**துலாம்** : பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். பொறாமையுடன் பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. வியாபாரம் செழிக்க கடுமையாக பாடுபட வேண்டி வரும்.

**விருச்சிகம்** :ஆடம்பரச் செலவுகளால் சேமிப்பு பணம் குறையும். உடல்நிலை சீராக இருக்கும். வியாபாரத்தில் வளர்ச்சி பெற மாற்று உபாயம் உதவும்.

**தனுசு** : மனதில் உற்சாகம் பிறக்கும். பணிகள் வேகமாக நடக்கும். சமூகத்தில் மதிப்பு அதிகரிக்கும். எதிர்ப்பாளர்கள் விலகிச் செல்வர். அபிவிருத்தி பணி செய்வீர்கள்.

**மகரம்** :மனதிலும், செயலிலும் புத்துணர்வு ஏற்படும். பணியில் இருந்த, தாமத நிலை விலகி முன்னேற்றம் உருவாகும். எதிர்ப்புகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள்.

**கும்பம்** :குடும்பத் தேவைக்கான செலவில், சிக்கனம் பின்பற்றவும். பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். பணியாளர்கள் சோம்பலைத் தவிர்த்தால் பணி நிறைவேறும்.

**மீனம்** : சமூகத்தில் நற்பெயரை பாதுகாக்க, கடும் முயற்சி எடுக்க வேண்டி இருக்கும். வருகின்ற இடையூறுகளை, தாமதமின்றி சரி செய்யவும். பொறுமை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

முள்ளிப்பொத்தானை
நிரூபர்

விளையாட்டு முரசு

## வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி



முள்ளிப் பொத்தானை தாருஸ்ஸலாம் முஸ்லீம் வித்தியாலத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி கடந்த 02-03-2016 அன்று பாடசாலை அதிபர் எம் மன்சூர் அலி தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு தலைவருமான அப்துல்லா மஹரூப் கலந்து சிறப்பித்தார். இதன்போது ஆசிரியர் மற்றும் பௌதிக பற்றாக்குறை தொடர்பாக பாடசாலை அதிபர் விடுத்த கோரிக்கைக்கான தீர்வினை விரைவாக கல்வி அமைச்சின் ஊடாக பெற்று தருவேன் என பிரதம அதிதி வாக்குறுதி அழித்தார். இல்ல விளையாட்டுப் போட்டியில் 300 புள்ளிகளுடன் சபா இல்லம் மூன்றாம் இடத்தையும் 328 புள்ளிகளைப் பெற்ற மினா இல்லம் இரண்டாம் இடத்தையும் 368 புள்ளிகளைப் பெற்ற மர்வா இல்லம் முதலாம் இடத்தைப் பெற்று இவ் வருடத்திற்கான சம்பியன் ஆனது. வெற்றியீட்டியோருக்கு வெற்றிக் கிண்ணமும் பரிசில்களும் வழங்கப்பட்டன.



## அனைத்து லீக்கிலும் வென்று இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு



கிரிக்கெட்

20 ஓவர் ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரில் வங்கதேசம், பாகிஸ்தானை பந்தாடிய இந்திய அணி இலங்கையையும் 5 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து 'ஹாட்ரிக்' வெற்றியுடன் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. இந்நிலையில் இந்தியா தனது கடைசி லீக்கில் எமிரேட்ஸ் அணியை எதிர் கொண்டது. இப்போட்டியில் நாணயசுழற்சியில் வென்ற ஐக்கிய அரபு அமீரக அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. 20 ஓவர்கள் முடிவில் எமிரேட்ஸ் அணி 9 விக்கெட் இழப்புக்கு 81 ஓட்டங்களை சேர்த்தது.

இதையடுத்து 82 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணியின் ரோகித் சர்மா 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து 3-வது விக்கெட்டுக்கு எதிர்பாராத வகையில் யுவராஜ் களம் இறக்கப்பட்டதுடன் எந்த நெருக்கடியும் இல்லாமல் 10.1 ஓவரில் 82 ஓட்டங்கள் எடுத்து வெற்றி இலக்கை எட்டியது இந்தியா.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி தனது அனைத்து லீக் போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணி நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் வங்கதேச அணியை எதிர்கொள்கிறது.

## உதிரி ஓட்டங்கள் எடுக்காது பங்களாதேஷ் அணி சாதனை

கிரிக்கெட்

இடம்பெற்ற பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆசியக்கிண்ண டி20 போட்டியில் பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சின் போது, தமக்கு நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் எந்தவிதமான உதிரி ஓட்டங்களையும் அணியினர் வழங்கவில்லை. இதன் காரணமாக பங்களாதேஷ் அணியினரால் மேலதிக பந்துகள் எவையும் வீசப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டி20 வரலாற்றில் இதுவரை எந்த அணியும் பந்துவீச்சின் போது உதிரிகள் எவற்றையும் வழங்காது தமது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களை நிறைவு செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## ஏற்றுக்கொள்ளப்படாத சாதனை

உலகின் அதிவேக நபரான உசைன் போல்ட்டின், உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றரை 9.58 செக்கன்களில் ஓடிய உலக சாதனையை அமெரிக்காவின் ஜஸ்டின் கட்லின் முறியடித்துள்ளார். எனினும் அது, உலக சாதனையாகக் கருதப்படாது. ஜப்பானிய தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய ஜஸ்டின் கட்லின், 9.45 செக்கன்களில் ஓடி முடித்தார். ஆனால், அவர் ஓடும் போது, அவருக்குப் பின்னால், மணிக்கு 20 மைல் வேகத்தில் காற்று வீசும் உபகரணமொன்று வைக்கப்பட்டே, இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. எனவே இது வெறுமனே தொலைக்காட்சிக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாக அமைந்தது.

## பாகிஸ்தான் வீரருக்கு போட்டிக் கட்டணத்தில் 50% அபராதம்

கிரிக்கெட்

தற்போது நடைபெற்று வரும் ஆசியக்கிண்ணப் போட்டியில் ஒளிரும் ஸ்டம்ப் மற்றும் பெய்ல்ஸ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஸ்டெம்பின் மதிப்பு ரூ.24 லட்சம் ஆகும். அதேபோல் 2 பெய்லின் மதிப்பு ரூ.50 ஆயிரம் ஆகும். வீரர்கள் இதை எந்த விதத்திலும் தொடக் கூடாது என்று ஏற்கனவே ஐசிசி எச்சரித்துள்ளது. இந்நிலையில் ஆசியக்கிண்ண தொடரில் வங்கதேசம்- பாகிஸ்தான் அணிகள் மோதிய போட்டியில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர் முகமது அமீர் பந்தில் வங்கதேச வீரர் சாகிப் அல் ஹசன் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் விரக்தியில் துடுப்பாட்ட மட்டையால் ஸ்டெம்பை தாக்கினார். பின்னர் சுதாரித்துக் கொண்ட சாகிப், கள நடுவர்களிடம் தனது தவறுக்காக மன்னிப்பு கேட்டார். இருப்பினும் அவருக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளது.




## அதிக சம்பளம் பெறுவது யார்?

கிரிக்கெட் போட்டிகளில் பணியாற்றும் நடுவர்களுக்கு ஒரு போட்டியில் அனைத்தும் சேர்த்து கிட்டத்தட்ட ரூ.2.85 லட்சம் ஊதியமாக கிடைக்கிறதாம். சர்வதேச ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் பணியாற்றும் ஆடுகள நடுவர் மற்றும் 3வது, 4வது நடுவர்களுக்கு ரூ.182,500 லட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது. ஆனால் டி20 போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு ரூ.150,000 தான் வழங்கப்படுகிறது. இதன் படி டி20 போட்டியில் நடுவர்களுக்கு அதிக சம்பளம் கிடைக்கிறது.
டெஸ்ட் போட்டியிலும் ஆடுகள நடுவர்களுக்கு ரூ.1,82,500 லட்சம் ஊதியமாக கொடுக்கப்படுகிறது. அதேவேளை 3வது மற்றும் 4வது நடுவர்களுக்கு முறையே ரூ.3 லட்சம், ரூ.1 லட்சம் கிடைப்பதாக மேலும் தெரியவருகின்றது.

## எவ்வேளையிலும் பாகிஸ்தான் விலகலாம்

பாதுகாப்பு குறித்து இந்தியா வெளிப்படையான அறிக்கை தரவில்லையெனில் பாகிஸ்தான் அணி எதிர்வரும் 8ம் திகதி முதல் ஏப்ரல் 3ம் திகதி வரை நடைபெறவிருக்கும் டி20 உலகக்கிண்ணத்தில் பங்கேற்காது என்று ஷாரியார் கான் தெரிவித்துள்ளார்.

இதில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி எதிர்வரும் மார்ச் 19ம் திகதி இமாச்சலப் பிரதேச மாநிலம் தரம்சாலாவில் நடக்கவுள்ளது. ஆனால் இங்கு பாகிஸ்தானுக்கு எதிராக போட்டி நடத்த எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. இதனால் போட்டியை நடத்த பாதுகாப்பு தர முடியாது என்று இமாச்சலப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது. ஆனால் பிசிசிஐ இந்தப் போட்டிக்கு உரிய பாதுகாப்பு தருவதாக தனிப்பட்ட முறையில் கூறியது.



ஆனால் இந்திய அரசு பாதுகாப்பு குறித்து வெளிப் படையான அறிக்கை தரவேண்டும். இல்லாவிட்டால் பாகிஸ்தான் அணி கடைசி நேரத்தில் கூட உலகக்கிண்ண தொடரில் இருந்து விலகும் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒரு நாடு இரு தேசம்"

# 6வது தேசிய மாநாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆறாவது வருடாந்த மாநாட்டில் "இரு தேசங்களைக் கொண்ட ஒரு நாடு" என்ற அடிப்படையிலேயே தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என் வலியுறுத்தப்பட்டு முதலாவது தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியமக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் வருடாந்த மாநாடு கடந்த பெப்ரவரி 27ல் யாழ் நல்லூர் சட்டநாதர் சிவன்-கோவில் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்ற இம் மாநாட்டின் முடிவில் பத்துத் தீர்மானங்களும்



நிறைவேற்றப்பட்டன.

வடக்கு கிழக்கை பாரம்பரிய தாயகமாக கொண்ட தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பவற்றைக் கொண்டிருப்பதனால்.......

பக் 17




# திருமலையில் - கொலை தடயங்கள் - வெலிசரயில்

திருகோணமலையில் கொலை செய்யப்பட்ட 11 இளைஞர்களை கொழும்பில் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட, இரண்டு டிபெண்டர் ரக வாகனங்களின் பாகங்கள், வெலிசரை சிறிலங்கா கடற்படைத் தளத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

நீதிமன்ற அனுமதியுடன், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் வெலிசறை கடற்படைத் தளத்தில் தேடுதல் நடத்தியிருந்தனர்.

இதன்போதே, திருகோணமலையில் கொலை செய்யப்பட்ட, 11 இளைஞர்களை கொழும்பில் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட,



இரண்டு டிபெண்டர் வாகனங்களின் பாகங்கள், மற்றும் மற்றொரு இளைஞரைக் கடத்திச் சென்று கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட உந்துருளி ஒன்றின் பாகங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆட்கடத்தல்களுக்குப்

பக் 17

# காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



திருகோணமலையில் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணிகளில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவரும் மக்களுக்கு, காணி உரிமை வழங்குவது தொடர்பில் கலந்துரை-யாடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை (3) இடம்பெற்ற கூட்டத்தின்போதே இவ்விடயம்.....

பக் 17

# தமிழ் அரசியல் கைதிகளின் நிலை கவலைக்கிடம்

## சட்டத்தரணி தெரிவிப்பு சிறைச்சாலை மறுப்பு

பங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுதலை செய்யுமாறு கோரி மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகள் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக சட்டத்தரணி மங்கலேஷ்வரி சங்கர் தெரிவித்துள்ளார்.

மெகஸின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளை நேற்று (04) சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் காணப்படும் பட்சத்தில் வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் இல்லாத




பட்சத்தில் தமக்கு பிணை வழங்குமாறும் அவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகள் ஏற்கனவே புனர்வாழ்வளிக்கப் - பட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் என சடட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் சட்டத்தரணியின் குற்றச்சாட்டை சிறைச் -சாலைகள் திணைக்களம்

பக் 17

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி திறந்துள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 05.03.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org